இங்கிலாந்து - £1, பிரான்ஸ் - 10FFr, ஜேர்மனி - 3DM, சுவிஸ் - 2.50SFr நோர்வே - 12NOK,
டென்மார்க் - 12DK, கனடா - 2.50CS, இலங்கை - 20ரூபா, இந்தியா - 15ரூபா

# புலம்


PULAM

9

வைகாசி - ஆனி 99

2364

IBC




**மறவர் படைதான் தமிழ்ப்படை - அவர்**
**வெல்வர் என்பது வெளிப்படை**

மக்கள் மனங்கவர்

ஜவுளியகம்

மளிகையகம்





நாகரீக உடைகள் தரமான தங்க நகைகள்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்

வீடியோ படங்களை முதன்முதலில்
ஜேர்மனியில் வெளியிடுவோர்

பழைய, புதிய பாடல்கள், எவர் சில்வர் பொருட்கள்,

சீ.டி - ஓடியோக்கள்


எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் நாடுங்கள்

**GERMANY** யில் ..............................

# JAFFNA

**STORES**

**FEILEN - STR - 8**
**33602 BIELEFELD**
**TEL: 0521 174794**



**STORES**

**ROON - STR - 1**
**59065 HAMM - 1**
**TEL: 02381 12614**

**புலம் 9**

வைகாசி ஆனி - 99

நாமும் நிலத்தினது நாகரிக வாழ்வுக்கு
நம்மால் இயன்ற பணிகள் நடத்திடுவோம்.
சும்மா இரோம்.

**எடிட்டோர்:**
இரவி அருணாசலம்

**தொகுப்பு:**
செல்லத்துரை நாவரசன்

**வெளியீடு:**
அ.ஒ.கூ.தமிழ்

**நிர்வாகம்:**
சுந்தரம் சிறீஸ்கந்தராசா

**விநியோகம்:**
கிருஷ்ணா

**ஆலோசனை:**
எஸ்.கே.ராஜென்
ஜி.எஸ். குமார்,
யசோதா மித்திரதாஸ்

PULAM 9

Editor:
Ravi Arunasalam

Co-ordinator:
Sellaturai Navarasan

Publisher:
IBC Tamil

Manager:
Suntharam Sriskandarajah

Distributor:
Krishna

Advisors:
S.K.Rajen
G.S.Kumar
Yasotha Mithrathas

**தொடர்பு:**
புலம்,
IBC - Tamil,
P.O.Box -1505
London SW8 2ZH.

தொலைபேசி: 0171 787 8000
தொலை மடல்: 0171 787 8010

email:
radio@ibc-tamil.demon.co.uk

Home page:
http://www.ibc-tamil.demon.co.uk
http://fastaccess.co.uk/~ibc

**அச்சுப்பதிப்பு:** வாசன் அச்சகம்
45C Crusoe Road.
Mitcham, Surrey, CR4.
Tel: 0181 646 2885

## புதியதோர் உலகம் செய்வோம்

▽ நான் என்பதாக ஒன்றுமில்லை. நாம் என்பதே எப்போதும் உண்மை. என்னால் செய்யப்படக்கூடியது என்பதிலும் எம்மால் செய்யப்படக் கூடியது என்பது வலிவு மிக்கது. எம்மால் இயலாத காரியம் என்று ஏதுமுண்டா? மலையை என்னால் அசைக்க முடியாது. மலையை நாம் அசைப்போம். நதியை என்னால் நிறுத்திவிட முடியாது. நதிக்கு நாம் அணை போடுவோம். ஆயிரம் கைகள் சேர்ந்தால் அனைத்துக் காரியங்களும் சாத்தியம். ஆயிரம் உணர்வு ஒரு சேர அனைத்து விடுதலையும் கிட்டும். அணி திரள்வதே அனைத்து வெற்றிக்கும் வழி.

▽ உலகத் தொழிலாளர் தினமாகிய மேதினத்தில் இந்த இதழ் விரிகின்றது. உலகின் அனைத்துத் தொழிலாளர்களில் நாமும் ஒருவர். உலகம் இரண்டு வர்க்கங்களால் ஆனது. சுரண்டிக் கொழுக்கும் வர்க்கம் சுரண்டப்பட்டு இழக்கும் வர்க்கம். ஒடுக்கப்படும் வர்க்கம் எப்போது உயர்ந்து நிற்கும்? அந்த வர்க்கத்தின் கையில் அதிகாரம் கிடைக்கும்போது மட்டுமே? அதுவரை வஞ்சிக்கப்பட்டதும் , வதை பட்டதும், வயிற்றில் அடிபட்டதுமான வாழ்வே எங்களது வாழ்வு. இதனையே நாம் வாழ்ந்திருக்கப் போகின்றோமா?

▽ பிரித்தானியாவின் தமிழ் மக்கள் சுதந்திரத்தை நோக்கிய பேரணி ஒன்றில் தம் விடுதலை பற்றிய பெருவிருப்பை உள்ளக் கிளர்வோடும் உணர்வுக் கொதிப்போடும் தெரிவித்தனர். ஆயிரம் ஆயிரம் கைகள் முஷ்டி மடக்கி, முழங்கை நிமிர்த்தி, வான் நோக்கி உயர்த்தி, தங்கள் வேட்கையை உணர்த்தி நின்றன. எமது நாடு, எமது உரிமை, எமது பாதுகாப்பு, எமது தலைமை, இவற்றை உறுதிப்படுத்திய மாநாடு அது. எமது பயணத்தின் இன்னுமொரு காலடி இது. வெல்வதன்றி வேறு வழி எமக்குத் தெரியவில்லை.

▽ கடந்த மாதம் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு தினம். மேற்போந்த செய்தி யாவற்றுக்கும் பாரதிதாசன் ஒரு வரி சொன்னார்:

▽ புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகை வேருடன் சாய்ப்போம்

-புலத்தார்

**இலங்கை, இந்தியாவிற்கு புலம் அனுப்ப விரும்புவோர் 6 இதழ்களுக்கு £15 பெறுமதியான பணத்தினையும் அனுப்பி வைக்கவேண்டிய முகவரியையும் அனுப்புங்கள்.**

**சந்தா - 6 இதழ்களுக்கு:**
இங்கிலாந்து - £ 10, பிரான்ஸ் - 100FFr, ஜேர்மனி - 30DM.
சுவிஸ் - 25SFr நோர்வே - 120 NOK, டென்மார்க் - 120DK
சந்தாப் பணத்தை: I.B.C எனும் பெயரில், காசுக்கட்டளை, அல்லது காசோலை மூலம் அனுப்பலாம்.

# அ.யேசுராசா

## *அ.யேசுராசா (1946—)*

*யாழ்ப்பாணத்திலுள்ள குருநகர் கிராமத்தில் பிறந்தவர். அஞ்சலதிபர் தந்தியாளர் சேவையில் இருந்த இவர், தற்போது ஓய்வு பெற்றுள்ளார். 1968 முதல் கவிதைகளும், சிறுகதைகளும் எழுதிவரும் இவர், இலக்கியம், நாடகம், திரைப்படம் பற்றிய விமர்சனக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 1975இல் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் அலை என்னும் காலாண்டிதழின் இணையாசிரியராக இருப்பதோடு யாழ் திரைப்பட வட்டத்தின் அமைப்பாளர்களில் ஒருவராகவும் இயங்கி வருகிறார். இதுவரை வெளிவந்த நூல்:*
*தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் (1974)*
*அறியப்படாதவர்கள் நினைவாக.*

### சங்கம் புழைக்கும்.... மாயா கோவ்ஸ்கிக்கும்......

சங்கம் புழை!
உன்நெஞ்சைமுட்கள் கிழித்த கதையறிவேன்
"குளிர்ந்துபோனஎன் நிராசைநித்தமும்
மூடுபனியாக, உன் வீதியிற்படரும்"
என்றபடிதுயரில் நீசெத்துப் போனாய்
உயிர்தின்றது உன் காதல்.

".....நொறுங்கியது காதற் படகு
வாழ்வும் நானும் பிரிந்தனம்..."
ஓ! மாயாகோவ்ஸ்கி
துயரினிலாழ்ந்தாய்;
குண்டுகளால் அதை வெல்லப்பார்த்தாய்

காதலின் வஸீகரக்
கடுமைதாக்க
நானும்உம்போல மனமழிந்த கவிஞன்தான்
இந்தவண்ணமெல்லாம்
நமக்கேன் நிகழ்கிறது?
மெல்லிதயங்கொண்டிருந்தோம்என்ப தாலா?

முதிரா இளைஞர் செயலென்று
உம்மையெலாம்
எள்ளுவார் அணி சேரேன்
என்றாலும்
உமது வழி தொடரேன்
செய்வதற்கு இன்னும்
பணிகள் மிகஉளதே!
செயலற்று வாழ்வில் ஒதுங்கமுடியாது:
'பிறத்தியானெல்லாம்
உள், நுழையுங் காலம்!'
முள்முடி குத்தும்
சிலுவை உறுத்தும்தான், என்றாலும்
சாவுவரை வாழ்வேன்!
சாவுக்கு அப்பாலும்
என் செயலிற் கவியில்
உயிர்த்தெழுவேன்!
உயிர்த்தே எழுவேன்!

**சங்கம் புழை - மலையாளக் கவிஞர், மாயாகோவ்ஸ்கி - ரஷ்யக் கவிஞர்**
**இருவரும் காதல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்டவர்கள் எனச் சொல்லப்படுகின்றது.**

# ஓர் ஓவியம் இத்தனை வலிமை கொண்டதா?


பிரசாந்தி சேகர்

**எத்தனை** காலம் பாடப்புத்தகங்களை மட்டும் விரித்துக் கொண்டிருப்போம்? சற்று மாறுதலுக்கான வழிவகைகள் எம் கைகளில் இருக்கின்றதல்லவா? எம்முன் ஒரு மனிதனின் இரு படைப்புக்கள்

1

BY NIGHT ON THE FOUR
AND TWENTY BRIDGES,
UNDER THE FULL MOON,
WHERE ARE YOUR TEACHING
A GIRL TO BLOW TUNES
ON YOUR FLUTE


2



இதில் எந்தப்படைப்பு எமை அதிகம் இழுத்துச் சென்றது? எது அதிகம் ஈர்க்க வைத்தது? எது மனதில் நிலைத்து நின்றது? ஓம் அது இரண்டாவது படைப்புத்தான். அதுவே எமை இழுத்துச் சென்றது. ஈர்க்க வைத்தது. மனதில் நிலைத்து நின்றது. இருந்தும் நாம் ஒன்றைக் கவனிக்கவில்லை. கேள்வி ஒன்றினை எழுப்பவில்லை. இரு படைப்புகளுக்குமிடையில் உள்ள தொடர்பு தான் என்ன என்று கேட்டோமா?

முதலாவது படைப்பு ஒரு கவிதை. இக்கவிதையினை நாம் காட்சிப்படுத்துவோமானால் அது ஓவியமாய் எம்முன் விரியுமானால் அதுவே இரண்டாவது படைப்பாகின்றது. சரி, ஆரம்பத்தில் ஒன்று சொன்னோமே? இரண்டாவது படைப்புத்தான் எமை அதிகம் இழுத்துச் சென்றது என்று. ஏன் இவ்வாறு நிகழ்கின்றது?

கவிதை தனித்து நின்று காட்சிப்படுத்தப்படுகின்றது. தான் ("UNDER THE FULL MOON... ON THE BRIGE..") நாம் அதனை மறுக்கவில்லை. ஆனால் அது ஓவியமாய் வெளிப்படும் பொழுது அவை பல உணர்வுகளை கொட்டிச் சொல்கின்றன. பல உணர்வுகள் எம்மில் தொற்றிக் கொள்கின்றன. மீண்டும் ஓவியத்தினைப் பார்ப்போம். முழு நிலவின் குளிர்மை அது தரும் மயக்கம் காற்றில் கரைந்திருக்கும் மெலிதான இசை.. அனைத்தும் நினைவு வருகின்றதல்லவா? போதும்!



இதிலிருந்து ஒன்று தெரியவருகின்றது. கேட்டல் வாசித்தலிலூடாக மட்டுமல்ல நாம் ஒன்றை அறிவதும், ஊகிப்பதும், முடிவு செய்வதும் பார்ப்பதும் பார்ப்பதை நினைவூட்டுவதும்மிகவும் அவசியமானதொன்று. "பார்த்தால்" எனக்குறிப்பிடும் பொழுது ஓவியங்கள், புகைப்படங்கள், இன்னும் எத்தனையோ வகையான படங்களை எடுத்துச் சொல்லலாம். இவ்வாறாக பார்க்கும் போது ஓர் ஓவியமானது ஒரு மனிதனின் ஆர்வங்களை, உணர்வுகளை எளிதில் தட்டி எழுப்பக் கூடியது. ஓவியம் அத்தகைய வலிமை கொண்டது.

சரி, இத்தகைய வலிமை கொண்ட ஓவியங்களை நாம் ஏன் ஒரு வேற்று மொழி கற்பித்தலிலும் பயன்படுத்த முடியாது? முடியும் இருந்தும் அவ்வாறு செய்தால் பயன் அளிக்காது என்று சிலர் பொதுமைப்படுத்திச் சொல்கிறார்களே: **"ஓவியங்கள் ஊடாக மொழி கற்பது குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் மட்டுமே பொருந்தக் கூடியது. முதிர்ச்சியடைந்தவர்கள் மொழி கற்பதற்கு ஓவியங்கள் தக்க வழி அல்ல."**

அப்படியானால் பல மொழியியலாளர்கள் உளவியலாளர்கள் கூறியது தவறா? **"நாம் எந்த வயதினராக இருந்தாலும் பல வகையான ஓவியங்கள், படங்கள் வகுப்பறைச் சூழலிற்குத்தக்க வழியில் பயன்படுத்தப் படும் பொழுது ஆர்வமும் சிந்தனை சக்தியும் தானாகவே வெளிவரும்"**

மேற்கூறிய இரு கருத்துக்களிலும் "இதுவே மெத்தச் சரியான கருத்து", "இதுவே தவறான கருத்து" என்று நாம் கூறவரவில்லை. எம் கட்டுரை அதனை சொல்லட்டும்.

சரி, முதலில் ஒன்றை குறித்துக் கொள்வோம். நீண்ட காலமாக வேற்று மொழி கற்பித்தலில் ஓவியங்கள் மற்றும் புகைப்படங்கள் விவரிக்கின்ற தன்மை கொண்டவையாக மட்டுமே ஆசிரியர்களால் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

உ+ம் பாரிஸ் நகரில் அமைந்திருக்கும் EIFFEL TOWER இன் புகைப்படத்தினை ஆசிரியர் மாணவர்களுக்கு காண்பிக்கின்றார். மாணவர்கள் ஓரளவு ஆங்கிலம் பேச எழுத தெரிந்தவர்கள். ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். THIS IS THE EFFEL TOWER. IT IS VERY HIGH ... (இது ஈவில் கோபுரம். இது மிகவும் உயரமானது..)

மாணவர்களையும் அப்புகைப்படத்தினை தொடர்ந்து விவரிக்கும் படி கூறுகின்றார். மாணவர்கள் தொடர்ந்து விவரிக்க மறுக்கின்றனர்.

இதனைப் பார்க்கும் பொழுது சற்று முன் சிலர் கூறியது நினைவிற்கு வருகின்றதல்லவா? **"ஓவியங்கள் ஊடாக மொழி கற்பது குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் மட்டுமே பொருந்தக்கூடியது. முதிர்ச்சியடைந்தவர்கள் மொழி கற்பதற்கு ஓவியங்கள் தக்க வழி அல்ல"**

உண்மைதான். இவ்வாறு மாறுதலே இல்லாத விவரணைகள் மாணவர்களிடையில் சரியான கருத்துப் பரிமாற்றம் நிகழ்வதற்கும் வழி வகுக்கா. எனவே ஆசிரியர்கள் ஓவியங்கள், புகைப்படங்களை மொழி கற்பித்தலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு?

உ+ம் அதே EIFFEL TOWER படத்தினை காண்பித்து இவ்வாறான கேள்விகளை எழுப்பலாம்.

HOW DO YOU FEEL SEEING THIS PICTURE?
(இப்படத்தினை பார்க்கும் பொழுது எவ்வாறு உணர்கின்றாய்?)

HAVE YOU EVER BEEN UP THE EIFFEL TOWER?
(எப்பொழுதாவது ஈபில் கோபுரத்தில் ஏறியிருக்கின்றாயா?)

ARE YOU FRIGHTENED OF HIGH PLACES?
(உயரமான இடங்களில் உனக்கு பயமளிப்பவையா?)

இது போன்ற உணர்வுகளை, அனுபவங்களை ஒரு

வேற்றுமொழியூடாக வெளிப்படுத்தக்கூடிய கேள்வி களை ஆசிரியர்கள் தொடுக்கும் பொழுது நாம் பதிலளிப்போம். கலந்துரையாடுவோம்:

**நாம் எந்த வயதினராக இருந்தாலும் பல வகையான ஓவியங்கள், படங்கள் வகுப்பறைச் சூழலிற்குள் தக்க வழியில் பயன்படுத்தப்படும் பொழுது ஆர்வமும் சிந்தனா சக்தியும் தானாகவே வெளிவரும்.**

இனி, வேற்று மொழி கற்பித்தலில் ஓவியங்கள், புகைப்படங்கள், மேலும் பல வகையான விளம்பர அட்டைகளை பயன்படுத்தக்கூடிய வகைகளை விரிவாகப் பார்ப்போம்.

ஒரு ஓவியத்தினூடாக நாம் ஒன்றுக்கும் மேற்பட்ட வேற்று மொழி பகுதிகளிற்கு அழுத்தம் கொடுக்க முடியும்.


உதாரணமாக STRUCTURES (மொழியில் உள்ள அமைப்புக்கள்) VOCABULARY !பல விதமான சொற்கள்) FUNCTIONS (தொழிற்பாடுகள்) SITUATIONS (சந்தர்ப்ப சூழ்நிலைகள்) READING/LISTENING/ WRITING SKILLS (வாசித்தல் கேட்டல், எழுதும் நுட்பம்) மேற்கூறிய அனைத்து பகுதிகளும் கருத்துப் பரிமாற்றத்தினை தூண்டுபவையாக அமைய வேண்டும்.

உதாரணமாக STRUCTURES எனும் பகுதியினை கருத்தில் கொள்வோம். இதில் ஒரு வேற்று மொழியின் வாக்கிய அமைப்பு, பலவித காலங்கள், சொல் வகைகள், கேள்வி தொடுக்கும் விதிகள் என்று பலவற்றைக் கூறலாம். உதாரணமாக நாம் இவ்வாறான ஓவியம் ஒன்றினை வரைந்துள்ளோம். மிகவும் இலகுவான ஓர் ஓவியம்.

நாம் ஓர் ஆசிரியராக இருப்போமேயானால் இப்படத்தினை கருவாகக் கொண்டு வேற்று மொழியின் காலங்களை ஓர் உரையாடல் மூலம் இலகுவாக புரிய வைக்க முடியும்.

ஆசிரியர் மேற்கண்ட படத்தினை காண்பித்து கேள்வி ஒன்றினை தொடுக்கின்றார். WHAT IS SHE DOING? (அந்தப் பெண் என்ன செய்கின்றார்?)

இங்கு பதில் எவ்வாறு அமையப் போகின்றது என்பது தெரிந்ததே.



மாணவர்A: SHE IS JUMPING (அந்தப் பெண் பாய்கின்றார்)

ஆசிரியர்: "IS SHE CLIMBING? (அவர் ஏறிச் செல்கின்றாரா?

மாணவர்B: NO SHE ISN'T. SHE IS JUMPING இல்லை அவர் பாய்கின்றார்

இங்கு ஆசிரியர் ஆங்கில மொழியில் அமைந்திருக்கும் PRESENT CONTINUOUS TENSE அல்லது PROGRESSIVE FORM என்று சொல்லக்கூடிய காலம் ஒன்றினை ஒரு படம் மூலம் எளிதாக கற்றுக் கொடுக்கின்றார் (AM/ARE/IS + verb+ing) அத்துடன் இரு சொற்களுக்குமிடையில் உள்ள வேறுபாட்டினை யும் JUMPING (பாய்தல்) CLIMBING (ஏறுதல்) எத்தனை இலகுவாக புரியவைக்கின்றார்?

இது ஒருவகையான ஓவியமூடாக மொழி கற்பித்தல் முறை மற்றுமொரு வகையும் கூட இருக்கின்றது. இங்கு படத்தின் முழு காட்சியும் எம்கண்முன் தோன்றாது. இதன் காரணமாக எம் சிந்தனை தூண்டப்படுகின்றது. கற்பனை வளர்கின்றது. ஆசிரியர் அப்படத்தினை முழுமையாக காண்பிப்பதை தவிர்த்து, படத்தின் ஒரு பகுதியினை ஒரு புது அட்டையால் மறைத்து கேள்வி யை தொடுக்கின்றார்.



ஆசிரியர் WHAT IS SHE DOING? (அவர் என்ன செய்கின்றார்? இங்கு பதில் எவ்வாறு அமையும் என்பது ஆசிரியர் அறியாதது. ஏனெனில் பலவகையாக பதிலளிக்க முடியும்.

மாணவர் A SHE IS WALKING (அவர் நடக்கின்றார்)

ஆசிரியர் IS SHE WALKING (அவர் நடக்கின்றாரா?


மாணவர் B SHE IS RUNNING (அவர் ஓடுகின்றார்)

ஆசிரியர் மெதுவாக மறைக்கப்பட்ட அட்டையினை கீழ்நோக்கி இழுத்து கேள்வியினை தொடுக்கின்றார்

IS SHE RUNNING? (அவர் ஓடுகின்றாரா?)

மாணவர் C: "NO SHE ISN'T SHE IS JUMPING! (இல்லை அவர் பாய்கின்றார்!)

இவ்வாறான கற்பித்தலில் எம் கற்பனை வளர்வது



மட்டுமன்றி இங்கும் PRESENT CONTINUOUS TENSE தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றது. மாணவர் களும் அதனை மெத்தச் சரியாக செய்கின்றனர். (SHE IS RUNNING. SHE IS WALKING. SHE IS JUMPING...)

இது போல் ஓவியங்களுடாக பலதை சொல்லலாம். இதனைப் பார்ப்போம்.

இங்கு ஒரு படத்திற்குள் பலவித வினைச் சொற்கள் PRESENT CONTINUOUS TENSE இல் அமைந்திருக் கின்றன.

WALKING. RUNNING. CLIMBING, JUMPING, CROUCHING, PLAYING, SHOWING,. DANCING, FIGHTING, SITTING என்று அடுக்கிக் கொண்டே



போகலாம். இவ்வாறாக சிறு பயிற்சிகள் வெற்றியளிக் கும் என்பது உறுதி.

நாம் கூறியதை தொகுத்துப் பார்த்தால் இவை அனைத்தும், சுருக்கமான சிறு உதாரணங்கள் மட்டுமே. விரிவாக விளக்கமாகப் பார்க்க, ஆய இன்னும் எத்தனை இருக்கின்றன!

உண்மைதான். இனியும் பாடப் புத்தகங்களை மட்டும் விரித்துக் கொண்டிருக்க முடியாது. சற்று மாறுதலுக்கான வழிகள் எம் கைகளில் தான் இருக்கின்றன. ஓவியம் அவ்வழிகளில் ஒன்று.

இனி, **எத்தனை இலகுவான முறைகள்! ஓர் ஓவியம் இத்தனை வலிமை கொண்டதா?** என எம்மில் பலரை கேட்க வைப்போம்.

இருந்தும் இறுதியாக ஒன்றை மட்டும் கேட்கிறோம்.

நாம் எந்த வயதினராக இருந்தாலும் ஓவியங்கள் படங்கள். வகுப்பறைக்குள் தக்க வழியில் பயன்படுத்தப்படும் பொழுது ஆர்வமும், சிந்தனா சக்தியும் தானாகவே வெளிப்படும்.

"ஓவியங்கள் ஊடாக மொழி கற்பது குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் மட்டுமே பொருந்தக்கூடியது.
முதிர்ச்சியடைந்தவர்கள் மொழி கற்பதற்கு ஓவியங்கள் தக்க வழி அல்ல.

இதில் எது மெத்தச் சரி?

புலம்

# கௌரி மகேஸ்

## முகத்தில் அறைவது குளிர் மட்டும் தானா

**எங்கள்** மகள் சௌம்யாவையும், சாராவையும் கூட்டிக் கொண்டு பாலர் பாடசாலை போகிற நாட்களிலெல்லாம் பிஞ்சு விரலைப் பிடித்து மண்ணில் 'அ' எழுதிய காலங்கள் என் மனத்தில் மின்னி மின்னி மறையும். அதைப் பிள்ளைகளுக்குச் சொன்னால் "அப்ப நீங்கள் படித்த Kinder graden ல் 5,6, விளையாட்டுச்சாமான் கூட இல்லையா" என்று பிள்ளைகள் அனுதாபத்துடன் என்னை ஒரு பார்வை! பிறகு அண்ணனும் தங்கையுமாக ஏதோ குசுகுசுப்பு!
லிசா வீடும் அருகிலேயே இருப்பதால் ஒரு வாரம் நாங்கள் சாராவையும் சௌம்யாவையும் Kinder graden ற்குக் கூட்டிச் சென்று கூட்டி வருவது அடுத்த வாரம் சாராவின் அம்மா விற்கு அந்த வேலை.
சாராவின் அப்பா டெனிஸ் 300 கி.மீற்றருக்கப் பாலுள்ள ஓர் நிறுவனத்தில் வேலை செய்கிறார். இது அவர்களின் சொந்த வீடென்பதுவும் டெனிஸ் வேலை பார்க்கும் நிறுவனம் அவரைப் பல ஊர்களிலுமுள்ள கிளை நிறுவனங்களிற்கும் அனுப்புவ தால் அவர்கள் இங்கேயே இருக்க டெனிஸ் வார இறுதிகளில் வருவார். சில நாட்களில் இவர்கள் அங்கு போவார்கள்.
கோடைகாலம் முடிந்து இலையுதிர் காலம் ஆரம்பித்த ஒரு நாளில் கின்டர் காடினில் ஒன்று கூடல் விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. குழந்தைகளெல்லாம் வர்ணங்கள் புசப்பட்ட முகத்துடன் வண்ணத்துப் பூச்சிகளாக வண்டுகளாக கரடிகளாக புலிகளாக வளைய வந்து கொண்டிருந்தன. மாலைச் சூரியன் பரவி விரிந்திருந்த மரங்களினூடே ஒளிப்பொட்டுகளை பூமித்தாய்க்கு இட்டிருந்தான். மர பெஞ்சுகளில் ஓய்வாக இருந்தபடி பெரியவர்கள் பியரை இராட்சதக் குழந்தை போலக் கொழுத்திருந்த கிளாஸ்களில் அருந்தினர். பின்னர் உணவுகள் நிறையவே அடுக்கி வைக்கப்பட்டிருந்த பகுதிகளை நோக்கிப் படையெடுத்தனர்.




பொதுவாக இப்படியான விழாக்களுக்கு எமது உணவு வகைகளையே செய்து கொண்டு போவதை நான் அண்மைக் காலத்தில் வழக்கமாகக் கொண்டிருக்கி றேன். ஒரு தட்டில் உணவுகளை நிறைத்தபடி வந்து எங்களுக்கருகில் அமர்ந்தார் டெனிஸ். அவரின் தட்டில் எங்கள் நாட்டுணவுகள் நிறைந்திருந்தன. அதைப் பார்த்த எனக்குள் ஓர் மகிழ்ச்சி பரவியது. அவர் சொன்னார் "எனக்கு இந்தச் சுவையான ஆசிய உணவுகளை அறிமுகம் செய்தது எனது முன்னாள் காதலியாக இருந்த லிசாதான்." எங்கள் முகத்தில் வந்து விழுந்த குழப்ப ரேகைகளைப் பார்த்த டெனிஸ் ஒரு குறும்புச் சிரிப்புடன் கூறினார். "எனது முதற் காதலியின் பெயரும் லிசாதான் அவளும் நானும் இந்திய ரெஸ்டோரண்டுகளை நாடித்தான் எப்போதும் போவோம்.."
உள்ளே போன பியரும் நன்றாக வேலை செய்யவே டெனிஸின் வாயிலிருந்து வார்த்தைகள் வழுக்கியபடி உதிர்ந்தன.
"எனது இளமைக் கால வாழ்வில் மிகத் துயரமான சம்பவங்களும் மிகச் சந்தோசமான தருணங்களும் வாய்த்தன. எனது அம்மா ஒரு விபத்தில் காலமானபின் அப்பாவினதும் முழு அன்பில் நனைந்தபடி வளர்க்கப் பட்ட பிள்ளைதான் நான். லீவுகளுக்குப் போய்விட்டு வரும்போது பாட்டியும் தாத்தாவும் தம்மிடம் என்னை விடும்படி கேட்டும் அப்பா மறத்து விடுவார். அம்மா இறந்த பின்னர் வேறு எந்தப் பெண்ணுடனும் சேர்ந்து வாழ அப்பா முற்படவில்லை..
அப்பொழுது சாரா சொன்னார் "இந்தக் கதை இனி முடிந்த பின்தான் நிற்பாட்டு வீர்களா? அல்லது இடை வேளை உண்டா?" செல்லமாக அவவை அடிக்கக் கையை ஓங்கினார் டெனிஸ். ஒரு பஸ்ஸை விட்டால் அடுத்ததாக வரும் கடுகதி பஸ்ஸில் பாய்ந்து ஏறுவதில் அனைத்து ஜேர்ம னியரும் கில்லாடிகள் என எம்மில் பலர் நினைக்கிறோமல்லவா! அது எவ்வளவு தவறான கருத்தென்பதை நேரடியாக அனு பவத் தில் காணும் சந்தர்ப்பங் கள் பல தடவை எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. மிக அழகான கட்டுக்கோப்பான ஐரோப்பா குடும்ப அமைப்பில் கூட்டுக் குடும்பங் களாகப் பாச வலையில் சிக்கி வாழும் பலரை இன்றும் ஜேர்மன் கிராமங்களிற் காணலாம். அதனால் டெனிஸின் அப்பாவைப் பற்றிய விடயம் என்னுள் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.
"கடவுள் நல்ல மனிதரைத்தான் சோதிப்பான் என்பார்கள். கெட்டவனென்றால் தண்டிப்பான்

என்பார்கள்.. சரி அது எதற்கு இங்கு... எனது தந்தைக்கு கடுமையான தலையிடி மணிக்கணக்கில் நாட்கணக்கில் தொடர்ந்தும் திடீரென மயங்கியும் இரு தடவை விழுந்து விடவே வைத்திய நிபுணர்கள் பல வித பரிசோதனைக்கெல்லாம் அவரை உட்படுத்தினர். இறுதியாகக் மூளையில் கட்டி இருப்பதைக் கண்டு பிடித்தனர். அதன்பின் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். என்னதான் வைத்திய வசதிகள் பெருகிய நாடென்றாலும் நெருக்கமானவர்களிற்கு ஆபத்தான் நோய் எனும்போது இந்த மனம் படுகிற பாடு இருக்கிறதே! இங்கும் மனிதர்கள் வைத்தியம் பலனளிக்காமல் மறையும் நிதர்சனம் எம்முன் விரிந்து கிடக்கின்றதல்லவா. எத்தனை தடவைதான் வைத்தியர் களும் தாம் செய்யவிருக்கும் சிகிச்சைகள் பற்றி பொறுமையாக எனக்கு விளங்கப்படுத்தியும் எனது மனம் சமாதானமாகாமல் இரவுகளெல்லாம் தூங்கா இரவுகளாயின. எந்தத் தகப்பனிற்குத்தான் சிவந்து சோர்ந்த கண்ணுடன் தன்னிடம் வரும் தன் மகனைக் காணச் சகிக்கும்? பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஆறுதல் கூறியபடி தானும் தேம்புவார் அப்பா, ஒரு நிமிடம்" என்று விட்டு மீண்டும் உணவுகளை நிறைத்து வர அப்பால் நகர்ந்தார் டெனிஸ்.



லிசாவின் முகத்திலும் சோகச் சாயல் அப்போது படர்ந்திருந்தது. லிசா மெதுவான குரலில் கூறினார் "டெனிசின் இளமைக் கால அதிர்ச்சிகள் இன்னும் அவரை வதைக்கத்தான் செய்கின்றன.

உணவுத் தட்டுடன் வந்த டெனிஸ் மீண்டும் தொடர்ந்தார். "எங்களின் இந்த மனச் சஞ்சலங்கள் தோய்ந்த பேச்சுக்களைப் பல தடவை கேட்ட நேர்ஸ் ஒருவர் அறிமுகப்படுத்திய பெண்தான் லிசா. இரவு பகல் பாராது ஆராய்ச்சிகளையே தனது சுவாசமாகக் கொண்ட இளம் பெண்தான் லிசா. ஆராய்ச்சிக் கூடம் தான் அவரின் வீடு. பல தடவை அவரிற்கேற்பட்ட தலைச்சுற்றுக்களை வேலைப்பளுவினால் என லிசா அலட்சியப்படுத்தியதன் விளைவு ஒரு இளம் விஞ்ஞானியின் மூளையிலேயே இரகசியமாக வேர் விட்டுத் தனது கிளைகளைப் பரப்பியிருந்தது Brain tumer என்ற மூளைக்கட்டி நோய்.

வைத்தியர்கள் அதைக் கண்டுபிடித்த போது அது மிகவும் அபாயக் கட்டத்தில் தான் இருந்தது. சத்திர சிகிச்சை செய்யாவிடின் அவர் இறப்பது நிச்சயம். ஆனால் சத்திர சிகிச்சை வெற்றியளிக்கும் என்பது மிகக் குறைவானதே. வேறெந்த வழியுமற்ற நிலையில் லிசாவின் சந்திர சிகிச்சைக்கான நாள் குறிக்கப்பட்டது. அந்த நிலையிலும் உற்சாகத்துடன் இருந்த அப்பெண் ணை அங்குள்ள எல்லோரிற்குமே மிகவும் பிடித்துப் போனது. இரு துருவங்களாக விளங்கும் என்னையும் லிசாவையும் அறிமுகப்படுத்திய அந்த தாதிப்பெண் மனோதத்துவம் தெரிந்தவர்தான். விரைவிலேயே லிசாவின் உற்சாகம் என்னையும் அப்பாவையும் தொற்றிக் கொண்டது. அதுமட்டுமா? அந்தக் கலகலப்பு நிறைந்த பெண்மேல் காதல் வயப்பட்டேன். நான் எவ்வளவுதான் தைரியமான பெண்ணாக இருந் தாலும் இப்படியான நிலையில் மனம் அன்பிற்கு ஏங்கும் போதும். காதலைப் பற்றியே சிந்திக்க நேர மின்றி தனது ஆராய்ச்சிகளையே காதலித்தபடி இருந்த அப்பெண்ணும் அதே உணர்வுக்கு உள்ளானாள்.

லிசாவின் வாழ்வு இன்னும் சில நாட்களில் முடியக் கூடும் எனத் தெரிந்தும் எங்கள் இருவரின் காதலும் அவளின் மூளையிலிருந்த கட்டி போல, வளர்ந்துதான் வந்தது."

வெயில் தாழச் செல்ல லேசான குளிருடன் கூடிய காற்று எம்மைத் தழுவிச் சென்றபடி இருந்தது. எதுவும் பேசத் தோன்றாது மௌனம் மட்டுமே எங்கள் மொழி யாய் டெனிஸின் முகத் தைப் பார்த்தபடி இருந் தோம்.

"எவ்வளவு எதிர்பாராத விடயங்கள் நடக்கிறது பாருங்கள். பெரியதாக ரிஸ்க் எதுவுமில்லை எனச் சொல்லிச் சத்திர சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப் பட்ட அப்பாவிற்கு அந்த மேசையிலேயே heart attack வந்து மயக்கத்திலேயே அவரின் உயிர் பிரிந்தது. அவர் மிகவும் பயந்து விட்டார் என்றார்கள்.

வைத்தியர்கள் அவரின் இருதய இயக்கங்களை சரியாகக் கணிக்கவில்லை. வழக்குப் போட்டு நஷ்டாடு வாங்கு என்று சில நண்பர்கள் கூறினர். நான் எதுவுமே செய்யவில்லை. எனக்கு இறந்த அப்பாவை நினைத்து அழவா சாவின் விளிம்பில் நிற்கும் லிசாவை நினைத்தக் கலங்கவா எனப் புரியாமல் நான் தவித்த தவிப்பு இருக்கிறதே" டெனிஸின் உடல் ஒரு தடவை அதிர்ந்து குலுங்கியது.

"ஆனால் நடந்ததைக் கேளுங்கள். லிசா கட்டி அகற்றப்பட்டு உயிர் பிழைத்த அதிசயம் சில தினங்களில் நடந்தது. அதன் பின்பும் மூன்று மாதங்கள் வரை அவள் பல வைத்தியசாலைகளில் மாறி மாறி இருந்து முற்றாகக் குணமாகும் வரை எனது பொழுதுக ளெல்லாம் அவளுடனேயே கழிந்தது. பின்னர் அவளும் நானும் ஒன்றாக வாழ ஆரம்பித்தோம்." ஒரு

குழந்தையின் ஆர்வத்துடன் கதையைச் சொல்லியபடி இருந்த டெனிஸ் தன்னைத் தானே உணர விரும்புபவர் போல எதுவும் பேசாது இருந்தார். பின்பு மெதுவாகக் கூறினார். "எங்கோ கோளாறு ஆரம்பமானது, லிசாவிற்கு உடலில் பலம் வந்ததும் அவளின் உயர உயரப் பறக்கும் வேகமும் மீண்டும் உயிர்த்தெழுந்தது. நான் அவளுக்கேற்ற துணை இல்லையோ என்ற எண்ணம் அடிக்கடி தோன்றியது. போதாததுக்கு எனக்குக் குழந்தையென்றால் கொள்ளைப் பிரியம். அவளோ குழந்தைகள் தனது முன்னேற்றத்துக்குத் தடை என நினைப்பவள். வெறுமையான வாழ்வைத் தொடர முடியாமல் நாங்கள் பிரிந்து விட்டோம். "ஆனால் ஒரு விதத்தில் லிசாவிற்கு நன்றி கூற வேண்டும். எனது தந்தையின் மறைவால் அன்று நான் மனம் உடைந்து போகாமல் பேசிப் பேசி என்னை வலுவுள்ளவன் ஆக்கியது அவளின் அன்புதான்."

மேலே கரிய மேகங்கள் சூழத் தொடங்க களைத்துப்போன குழந்தைகளும் எம்மிடம் ஓடி வந்தனர். நன்றாக விளையாடிய திருப்தியுடனும் குளிர் பானங்களை எடுத்து ஒரே மூச்சில் குடித்தனர்.

கோடை காலச் சந்தோச தினங்கள் விரைவில் ஓடிப் போனது. காலமும் எவருக்காகவும் காத்திருக்காமல் தன் கடமையைச் செய்தது. குளிர் மனிதரைப் பிடுங்கி எடுத்த ஒரு காலையில் பூனைக் குட்டிகள் போலப் போர்வைக்குள் சுருண்டிருந்த குழந்தைகளை எழுப்பி சந்திர மண்டலத்திற்குப் போவது போல வெளிக்கிடுத்த வேண்டும் என்ற எண்ணமே அலுப்பை ஏற்படுத்தியது. இனி ஒரு வாரத்திற்கு சாராவும் வரமாட்டா. நாளைக்கு மறுநாள் டெனிஸின் பிறந்த நாள் வருவதால் இன்று மதியமே தாயும் மகளுமாக அங்கே பயணப்பட இருந்தனர்.



நேற்றும் பின்னேரம் முழுவதும் வானமெனும் தலையணை பொத்துக் கொண்டது போல வெண் பஞ்சுகளாக பனி பூமியை வந்து முத்தமிட்டபடி இருந்தது. பஞ்சுப் பொதிகளாகக் குவிந்துகிடந்த முற்றத்துப் பனிகளையெல்லாம் கூட்டி அள்ளி snow man செய்கிறோமெனப் பிள்ளைகள் கொட்டமடித்தனர். அவரும் மூக்கில் கரட்டுடனும் தலையில் தொப்பியும் போட்டு கையில் ஒரு துடைப்பமும் வைத்தபடி கம்பீரமாகத்தான் இருந்தார். அதைப் பார்த்த பலரும் ஒரு நிமிடம் நின்று அவரை ரசித்துவிட்டுச் சிரிப்புக்களை உதிர்த்தபடி சென்றனர். கையில் ஒரு பரிசுப் பொருளுடன் வந்த ஒரு இளம் பெண் அப்பரிசை அவரின் பனி உடலிற்கும் துடைப்பதற்கும் இடையிற் செருகவே குழந்தைகளின் உற்சாகம் கரைபுரண்டது.

காலை நேரப் பரபரப்புடன் பம்பரமாகச் சுழன்றபோது தொலைபேசி அழைத்தது. நிரு அதை எடுத்துக் கதைத்துவிட்டு முதலில் ஓடிப்போய் தனது தங்கையிடம் சொன்னான் "சாரா இண்டைக்கு உன்னோட வாறாள் உனக்கு குளுக் (அதிஸ்டம்)" பின்பு.. "அம்மா உங்களைப் போகேக்கை வந்து சாராவைக் கூட்டிக் போகட்டாம்."


சாரா வீட்டிற்கு நாங்கள் போனபோது சாராவின் அம்மா சோபாவில் படுத்திருந்தவ மெதுவாகக் கூறினா, "எனக்கு நேற்று இரவிலிருந்து சரியான காய்ச்சலாக இருக்கிறது. இரவு வீட்டிற்கு வைத்தியர் வந்து பார்த்து விட்டு இது ஒரு வித வைரஸால் ஏற்படும் கடும் காய்ச்சல் என்று மருந்து தந்தவர்" என்றா. காய்ச்சலால் சிவந்திருந்த முகத்தில் டெனிஸின் பிறந்த தினத்துக்கு அங்கு போக முடியாத கவலையும் சேர்ந்திருந்தது. பின்பு லிசா கூறினா "எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்வீர்களா..."

"எதுவானாலும் கூறுங்கள்." என்று நான் கூறவே உள்ளே சென்று ஒரு பரிசுப் பார்சலை எடுத்து வந்தா. "லிஸா ஒவ்வொரு வருடமும் தவறாது வருவது போல இம்முறையும் வந்தவ. டெனிஸிடம் கொடுக்கும்படி அவ தந்த பரிசுப் பொருளை தவறாது உரிய நேரத்தில் சேர்க்க வேண்டியது எனது கடமையல்லவா?" தயக்கமோ, தன்னிரக்கமோ, தனது செயலை உயர்த்திக் காட்டுவது போலவோ அன்றி ஒரு சாதாரண தொனியில் சொன்னவர், "டெனிஸிற்கான எங்களது பரிசையும் தருகிறேன்.. ஒரு பார்சல் அனுப்பும் பெட்டி ஒன்றை வாங்கி அதனுள் வைத்து அனுப்பி விடுகிறீர் களா?" என்று கேட்டதுதான் தாமதம் தனது குட்டிக் கையால் அப்பாவிற்குப் பரிசளிக்கக் கீறிய ஒரு படத்தை சாரா ஓடிப் போய் எடுத்துக் கொண்டு வந்து தந்தா. எனக்கு நன்றி கூறியபடி லிசாவும் தயாராகக் கட்டி வைத்திருந்த பரிசுப் பொருளைத் தந்துவிட்டு பணத்தை எடுக்க உள்ளே சென்றா. மிக அழகாகக் கட்டப்பட்டிருந்த அந்த பரிசுப் பொருளின் மேல் எனது பார்வை சென்றது. **'இனிய பிறந்ததின வாழ்த்துக்கள்... நேசத்துடன் லிசா + லிசா'** என எழுதப்பட்டிருந்தது. சட்டென்று என்னுள்ளே ஒரு விபரிக்க முடியாத உணர்ச்சிகளுடன் கூடிய அலை ஒன்று பொங்கிப் புரண்டது. நான் நிமிர்ந்து லிசாவைப் பார்த்தேன். லிசாவின் சுடர் விடும் அழகிய முகத்தில் சோர்வையும் மீறிய ஒரு இதமான சிரிப்புத் தவழ்ந்து கொண்டிருந்தது.

■

# தாடியறுந்த வேடன்

இலங்கையிலுள்ள விந்தனைக் காட்டிலே ஒரு வேடன் வாழ்ந்து வந்தான். அவன் உறுதியான உடம்பு உடையவன். அவனுக்கு நீண்ட தாடி இருந்தது. அவன் ஒரு நாய் வளர்த்தான். அதன் பெயர் வீமன். மான் மரை, முயல், அணில் முதலிய விலங்குகளை வேட்டையாடிப் பிடிப்பதற்கு வீமன் உதவி செய்யும். ஒருநாள் அவ்வேடன் அணில் வேட்டையாடி னான். அப்போது அவனுடைய தாடி அறுந்து போயிற்று. அஃது எப்படி யறுந்ததென்று படிப்போம்.





**வீமா! வீமா! ஓடி வாவா — அணில்**
**வேட்டை ஆடிப்பிடித்து ஊட்டுவேன் வாவா**
**தேமா மரத்திற் பதுங்கி — மாங்காய்**
**தின்னும் அணிலைப் பிடிப்போம் ஒதுங்கி**



**மரத்தில் இருந்து குதித்தே — அடடா**
**வாலைக் கிளப்பிக் கொண் டோடுதே பார்பார்!**
**துரத்திப் பிடிபிடி வீமா — உச்சு**
**சுசூ அணில் எம்மைத் தப்பியும் போமா**

| |
|---|
| ஊட்டுவேன் — உண்ணச் செய்வேன். |
| தேமா — இனிப்பான மாம்பழந்தரும் ஒரு சாதி மா. |
| உச்சு சுசூ — நாயை ஒடத்தூண்டிவிடும் குறிப்பு. |

**பொந்துக்குட் புகுந்தது வீமா — உந்தப்**
**புறத்தில்நில் அந்தப் புறத்தினில் வருவேன்**



**அந்தோ என் தாடியை விடுவாய் — அந்த**
**அணில் தப்பி ஓடிய தையையோ கெடுவாய்**

பிறருக்குத் தீமை செய்யாத உயிர்களைக் கொலை செய்யக்கூடாது. அச்செயல் தனக்கே துயரந்தரும்.

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

புலம் 8இன் பாலர் பக்கத்திலும் எலியும் சேவலும் எனும் கதைப்பாடலிலும் அவரை நாம் கண்டோம். மீண்டும் வந்திருக்கின்றார். வந்தவர் கதை ஒன்றும் தந்திருக்கின்றார். அவர் உருவத்தை நினைத்துப் பார்க்கின்றோம். வெண்மையான தாடி, வீபூதிக்குறி, நடுவே திலகம், வயது போன உருவம், ஆயினும் அவர் பாலர்கள் பரவசப்பட தந்த பாடல்கள் அனேகம். அதனைப் படித்து இன்புறுவோம் நாம்.

# பிறந்ததின வாழ்த்து



ஜேர்மன், கனோபரில் வசித்துவரும்
லோகநாதன் ராஜேஸ்வரி தம்பதிகளின்

**செல்வமகள்**

**சொபிற்றா லோகநாதன்**

எதிர்வரும் *26.05.99* அன்று
கொண்டாடுகின்றார்.
சொபிற்றா பல்கலையும் கற்று பண்புடன்
வாழ்கவென வாழ்த்துவது
அன்பு அப்பா, அம்மா, பெரியக்கா,
நீரஜா,சின்னக்கா, சிந்துஜா, இவர்களுடன்
பேரன்மார், பேத்திமார், மாமன்மார்,
அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார்,
சித்தப்பாமார், சித்திமார், சகோதரிகள்,
உற்றார், உறவினர் நண்பர்கள் அகியோர்
வாழ்த்துகின்றார்கள்.

சொபிற்றா லோதநாதன்

தகவல் திருமதி ராஜேஸ்வரி லோகநாதன்


# பிறந்ததின வாழ்த்து

மானிப்பாய் — நல்லூர்
சுரேந்திரா திலகா தம்பதிகளின்

**செல்வப்புதல்வன்**

**சாகித்யன்**

தனது முதலாவது பிறந்தநாளை
*06.06.99* அன்று ஜேர்மனி — நூர்ன்பேர்க்கில்
உள்ள தனது இல்லத்தில் மிகக் குதூகலமாகக்
கொண்டாடுகின்றார்.
இவரை இலங்கையில் உள்ள அப்பம்மா,
அம்மம்மா, அம்மப்பா, தாத்தா, மாமாமார்,
மாமிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார்,
அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார்,
ஜேர்மனி பெரியமாமா குடும்பத்தினர், பிரான்ஸ்
பெரியம்மா குடும்பத்தினர், லண்டன் சின்னமாமா
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்
ஆகியோரும் சாகித்யனை சகல செல்வங்களும்
பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



சாகித்யன்

# DURGA MARKET




# DURGA MARKET



## Osterholzer Landstrasse 106
## Bremen
## Tel: 0421 - 409 - 22 - 64

ஒரே நேரத்தில் *10,000* கிலோ மீன்வகைகளப் பெற்றுக் கொள்ளலாம்.
அனைத்து மீன்வகைகளும் Holland விலையில்
பெற்றுக்கொள்ளலாம். ஆட்டுறைச்சி மரக்கறி வகைகள் வீட்டிற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள் அனைத்தும் மிக மலிவான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.





TIME Travel & TOURS

**FLIGHTS TO EVERY DESTINATION ON ALL POPULAR AIRLINES**

**instant Ticketing**

**If you find any cheaper quote we will beat it or match it**

Main Agent for

ROYAL JORDANIAN
الملكية الأردنية

**AND AGENTS FOR OTHER AIR LINES**

*Colombo, Madras, Toronto*

*Please check our offer fares*

IATA

**Open 7 days a week**
**All major credit cards accepted**

ATOL 74585

**Time Travel & Tours**


**136 Kenton Road**
**Harrow, Middlesex HA3 8AZ**
**Tel: 0181 909 9995**
**Fax:0181 909 9997**
**Mobile: 07970 406 643**

# ARCHIES

**SUPER STORE**

**205 Edgware Road, Colindale, London NW9.**

*Tel: 0181 205 3652, Fax: 0181 205 1618*



இலங்கையில் கிடைக்கும் அனைத்து
மரக்கறிகள், கடல் உணவுப்
பொருட்கள், மளிகைப் பொருட்கள்
அனைத்தும் இங்கு கிடைக்கும்.

**சீடி, வீடியோ, ஓடியோ, சஞ்சிகை,
பத்திரிகைகள், அலங்காரப்பொருட்கள்,
பிரம்புக்கதிரைகள், பாத்திரங்கள்
ஆகியன தரமாக பெற்றிட நாடுங்கள்**

## ஆச்சிஸ் சுப்பர் ஸ்ரோஸ்

ஏழு நாட்களும் காலை 8மணிமுதல் இரவு 11.00 மணி வரையும் திறந்து வைக்கப்படும்

*We accept all major credit cards.*

*We offer value for your money and exceptional service.*

# மஹாகவியின் புதியதொரு வீடு

**எழுதியது: 31.08.1969 — 03,09,1969**
**முதல் மேடையேற்றம்: 21.08.1971**
**நெறியாள்கை: அ.தாசீசியஸ்**

*1927இல் யாழ்ப்பாணத்திலுள்ள அளவெட்டி எனும் கிராமத்தில் பிறந்து 1971ல் காலமாகிப் போன மஹாகவி எனும் புனை பெயர் கொண்ட து.உருத்திரமூர்த்தி எழுதிய பா நாடகம் இது. ஏலவே கோடை எனும் பா நாடகத்தையும் எழுதியிருந்தார்.*
*இரு நாடகங்களையும் அ.தாசீசியஸ் நெறியாள்கை செய்திருந்தார்.*
*இப்பாநாடகத்தை மேடையில் நாம் காணும் தோறும் ஈழத்துத் தமிழ் அரங்கச் செழுமை நம் கண்முன்னே விரியும்.*
*அவலச் சுவையை (Tragedy) தன்னகத்தே கொண்ட சிறிய நாடகம் இது. கண்ணகிக்கு என்ன நேர்ந்ததோ மாதவி எதனால் துன்புற்றாளோ, சீதைக்கு என்ன நிகழ்ந்ததோ, பாஞ்சாலி எதனால் பரிதவித்தாளோ, அவர்கள் பட்ட அதே அவலத்தை அல்லது இன்னும் இருக்கக்கூடிய எல்லாப் பெண்களும் படும் அவலத்தை 'புதியதொரு வீடு' மயிலியும், படுகின்றாள். அனுபவிக்கின்றாள்.*
*கவியாற்றலும், அரங்கச் செழுமையும், காவியமாகக் கூடிய அதன் அவலமும் நம்முன்னே காட்சியாக விரிகின்றன.....*

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**மாயன்:**
தோற்றுச் சரிந்தேன் தோற்றுச் சரிந்தேன்
**பாடகர்:**
தொடர்ந்து தொடர்ந்து கொடும்
**குழு:**
காற்று மத்தாய்க கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
(புயலின் ஒலி, ஒளி நடமாட்டக் கோலம் மறைய மன்னவனும் மாயனும் பழைய இடங்களில் தெரிகிறார்கள்)
பாடகர்:
கடல் மடியில் அவன் புரண்டான் கையில்பட்ட
கட்டையுடன் அவன் மிதந்தான் கரையில் சேர்ந்த
உடல் நெடுநாள் உலைந்துயிர்ப்பு மீண்டு காட்டின்
ஊடுபல யுகம் நடந்தோர் ஊரைக்கண்டும்
தொடர் தொடராய்த் தடைதடுக்க துடிக்கும் தோற்ற
துணிவுகளைத் துளித்துளியாய் மீட்கும் சொந்தத்
திடல் நிலத்தில் ஒரு காலை அவன் கால் வைத்தான்
சிற்றெறும்பாய் உலகினையே சுற்றி மீண்டான்.
**மன்னவன்:**
ஐயா, இதுதானே எங்களது வீடு
**மாயன்:**
மெய்தானே தம்பி?
**மன்னவன்:**
நாய் கடித்துப் போடும் மெதுவாக வாருங்கோ
**மாயன்:**
நடதம்பி முன்னாலே
(மேடையில் ஒரு குடிசையின் முகப்புத் தெரிகிறது கூரை, விறாந்தை, திண்ணை)
**மன்னவன்:**
பாய் எடுத்துப் போடம்மா, ஐயா வருகிறார்... அம்மா....
**மாயன்:**
மயிலி
**மயிலி:**
(தெரிகிறாள்) அது யார்?
**மாயன்:**
அது நான்!
**மயிலி:**
ஆ... நீங்களா? (சிலையாதல்)
**மன்னவன்:**
அம்மா (சிலையாதல்)
**மாயன்:**
மயிலி!
(ஒரு புறத்தில் நோக்கி ஏதோ காணக்கூடாத ஒன்றைக் கண்டு விட்டது போல் ஏங்கி)
நெடுந்தூரம்
நீண்ட நாள் ஓடி நினைவெல்லாம் நீயாக
மீண்டேன், இதுவோ விளைய இருந்ததம்மா (சிலையாதல்)
(மாசிலன் புகுந்து மூவரையும் கண்டு தானும் சிலையாதல், வியப்பும் திகைப்புமாக தொடர்ந்து அவ்வாறே மையுண்ட நெடுங்கண்ணாத்தையும், சில கணங்களின் பிறகு, மறைக்காடரும் புகுந்து நிலைமையைக் கண்டு சிலைகளாதல், மெல்ல இருள் சூழ்கிறது. பிறகு சில கணநேரம் சூறாவளி மழையின் ஒலி-ஒளிக் குறிப்புக்கள்)

## காட்சி 2

(கடற்கரை, புயலின் ஒளி-ஒலிக் குறிப்புக்கள் ஓய்கின்றன. புயலுக்கு ஒருவாரம் பிந்திய அமைதி, மாலை 6 மணி, மயிலி சோகமே உருவாக மரக்குற்றியில் குந்திக் கொண்டிருக்கிறாள். ஐப்பசி மாதம் 1957ம் ஆண்டு. **காட்சி** 1 க்கு 8 ஆண்டுகள் முன்னர்)
(மேடையின் பின்புறத்தே ஆட்கள் அலையாகவும் புயலாகவும் ஆடுகின்றனர்).
**பாடகர்:**
மின்னல் மின்னல் மின்னல்
**குழு:**
மின்னல் மின்னல் மின்னல்
**பாடகர்:**
மீண்டும் வெடுக்கென்று
**குழு:**
மின்னல் மின்னல் மின்னல்
**பாடகர்:**
கன்னம் தெறிக்கும்படி
**குழு:**
இடி இடி இடி

## புலம்

**பாடகர்:**
கன்னம் தெறிக்கும்படி
**குழு:**
இடி இடி இடி
**பாடகர்:**
காற்று மத்தாய் கடலைக் கடைகிறது
**குழு:**
காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது
பாடகர்:
காற்று மத்தாய் கடலைக் கடைகிறது
குழு:
காற்று மத்தாய் கடலைக் கடைகிறது
(புயலாக ஆடியவர்கள் வெளியேறுகிறார்கள்)
**மாசிலன்:** (புகுந்து)
காலை தொடக்கம் கடலையே பார்த்திருந்தால்
வேலை ஒன்றும் இல்லையே மச்சாள் இனி எமக்கு
ஏழெட்டு நாளாய் இதுவே கதையென்றால்?
**கண்ணா:** (புகுந்து)
வாழவிடன் நீ. பொடியனை, வா வீட்டுக்கு
**மாசிலன்:**
மேடொன்று பார்த்துக் குடில் ஒன்ற போட்டுள்ளேன், பள்ளிக்கூடத்திற் படுக்க இனித் தேவையில்லை.
கோயிலிலே கஞ்சி குடிப்பதற்கும் தேவையில்லை.
புண்ணியர் சொன்னார், புதிதாகக் கட்டுவது
திண்ணமாம் நூறு குடிசை நமக்கென்று.

**கண்ணா:**
பாண் இருக்க வாங்கியது, பச்சடியும் நான் அரைத்தேன்
ஏனாச்சி இன்னும் இருக்க? வா வீட்டுக்கு
**மயிலி:**
வீடுகளும் வாசல்களும் மெய்யோ
வேறும் வழி காணவில்லை ஐயோ
கூடி வாழ்ந்த கூடு குலைந்ததே
குலைப்பதும் ஒரு தெய்வமோ

**கண்ணா:**
கதைக்கும் கதை இதுவே?
போ எழுந்து, வீட்டுக்கு, பொன்னாலைப் பக்கத்தில்
சந்தியாபிள்ளை சடலம் ஒதுங்கியதாம்,
ஐந்தாறு பேராம் அலுப்பாந்திப் பக்கமாய்
வந்து மிதந்தவர்கள்! வாகைக் கரையோரம்
இந்தியாக்காரர் இருபது பேர் தண்ணீரிற்
செத்துச் சிதம்பி வந்து சேர்ந்தாராம் காலமை.
**மாசிலன்:**
அண்ணன்தான் இல்லை! அடுத்தவர்கள் யாவருமே
வந்து விட்டார்கள்.
**கண்ணா:**
வடிவாய்ச் சவமாக!
என்ன செய்வம் நாங்கள்!
**மாசிலன்:**
எழும்பன், இருந்தென்ன?
**கண்ணா:**
வாடிபிள்ளை வீட்டுக்கு வாயில் விரலை வைத்துச்
சூப்புதடி உன் குழந்தை சூள்கொட்டிச் சூள்கொட்டி
வேப்பங்கிளை யிலே கட்டிவிட்ட ஏணையிலே
ஈரமாய்ப் போச்சு துடுப்பும், இதை மாற்றும்
வாரும், இதென்ன வராததுகள் வந்தது போல்?
**மறைக்:** (புகுந்து)
இந்தா இதில் இரண்டு பாசல் எடுத்துப் போ,
**கண்ணா:** (மயிலிக்கு)
குந்தாதே மீண்டும், எழும்பு
**மறைக்:** (கொடுக்கிறார்)
சாப்பாட்டுப் பாசல், அதுதான் தரவந்தேன்.
வானிற் கொணர்ந்து வழங்குகிறார் வேற்றூரார்!
அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ்? மற்றவர்கள்
துன்பத்தைக் கண்டு துடிப்போர் மனிதர்கள்.
**மாசிலன்:**
எங்களுக்கேன் பாசல்?
**கண்ணா:**
உதவாதே சாப்பாடும்?
தாருங்கோ இங்கே, தரப்பட்டதன்போடு,
வேண்டாம் என நாம் விடுதல் சரியில்லை,
(இரண்டு பாசலையும் பெற்றுக் கொண்டு)
இந்த இரண்டும் இவருக்கிருக்கட்டும்
இன்னும் ஒன்று வேண்டும் எனக்கு?

**மறைக்:**
சரி, இந்தா (மூன்றாம் பாசலைக் கொடுத்து)
எட்டு நாளாக எமது கடற்பரப்பில்
ஒற்றைச் சதுர அடியும் ஒழியாமல்
தேடல் புரிந்து திரிந்த விமானங்கள்
காலையுடனே கடமை முடிந்ததனால்
சொந்த ஊருக்குத் திரும்பத் தொடங்கினவாம்.

**கண்ணா:**
இன்னும் சவங்கள் இருக்குமென எண்ணுவதில்
புண்ணியம் இல்லை. புறப்படடி மயிலி.

**மறைக்:** (மாசிலனிடம்)
தூரத்திலிருந்தெம் துயரை அறிந்ததுமே
ஓரத்தினில் வந்து உதவி புரிந்தார்கள்.
வாரப்பாட்டோடு மனிதர்கள், வாழவல்ல
ஓர் உலகைக் கண்டோம், புயலொன்றின் ஊடாக.

**கண்ணா:** (பாசலை முகர்ந்து பார்த்து)
நல்ல மணமாய் மணக்கிறது. நன்றாகத்
தாளிதம் போட்டான், தருமத்தில், தாறவனும்!

**மறைக்:**
சும்மா அலம்பாதே! சோற்றுக் கதையை விடு
நம்மால் இயன்ற அலுவலை நாம் செய்வோம்
மாசிலனோடும் மயிலியோடும் கொஞ்ச நாள்
நீயும் இருபோய், அவர் வீட்டில் நிச்சயமாய்
என்ன மயிலி, எழும்பு பிள்ளை, போகலாம்.
**மாசிலன்:**
இன்னும் "அழாமல்" எழும்பு.
**மயிலி:**
கடவுளே!
(யாவரும் போதல், மயிலியை மையுண்ட நெடுங்கண்ணாத்தை அழைத்துக் கொண்டு போகிறாள்)

**(இன்னும் வரும்)**

# சுசீலா

## தமிழ் சினிமா காட்டும் பெண்



***பாரதிராஜா*** பெண்கள் பற்றிய திரைப்படங்களை எடுக்கா விட்டாலும் தனது திரைப்படங்களில் பெண்கள் பிரச்சினையைத் தொட்டுள்ளார். ஆனால் **புதுமைப் பெண்** என்னும் திரைப்படம் பெண்ணைப் பற்றி அவளின் விடுதலை பற்றி எடுக்கப்பட்ட திரைப்படமாகும். கதாநாயகி அச்சமும், நாணமும், அடிமைச் சிறுமதியும் கொண்டவளாகவே படைக்கப் பட்டுள்ளாள். காதலிக்கும் போதும் திருமணமான பின்பும் வேதகாலத்து மாதரைப் போல கணவன் காலில் பூ வைத்துத் தொட்டுக் கும்பிடுகிறாள். பட்டதாரிப் பெண்ணாதலினால் திருமணத்திற்குப் பின் வேலை செய்து சம்பாதித்திருக்கலாம். இறுதியில் கணவன்— தனது கடமையை — உழைத்துக் குடும்பத் தைக் காப்பாற்றி கணவனையும் விடுவித்ததை எண்ணாமல் கற்பை சந்தேகித்ததைத் தாங்க முடியாமல் வெளியேறுகிறாள். பெண் விடுதலை பேசிய இப்படத்திலும் கூட இரண்டு இடங்களில் இளம் பெண்களை அரைகுறை ஆடைகளில் பாடி ஆட விட்டுள்ளார் பாரதி ராஜா. மனைவிக்கு விவாகரத்து உரிமை, பிரிந்து செல்லும் உரிமை உண்டு என்பதை அறிவு பூர்வமாகக் காட்டவில்லை. தன்னில் சந்தேகப்படும் கணவனைத் திருத்த முயற்சி செய்து முடியாமல், உணர்ச்சியின் அடிப்படையில் பிரிகிறாள். குனிந்திருந்த பெண்கள் ஒரே நேரத்தில் கையை உயர்த்தியபடி நிமிர்வதில் இருந்தே இத்திரைப்படம் ஆரம்பமாகிறது.

## சூரியனைக் கட்டி வைத்தவள்

**ஒரு தென்றல் புயலாகி வருமே**
**ஒரு தெய்வம் படி தாண்டி வருமே**
**கால தேவனின் தர்ம எல்லைகள் மாறுகின்றதே**
**அடுக்களை துடைப்பதும் படுக்கையை விரிப்பதும்**
**அது பெண்ணின் தொழில் இல்லையே**
**நிலவினில் இருக்கின்ற களங்கத்தை இவளது**
**பெருவிரல் துடைத்து விடும்**
**புதுயுக மகளிவள் அணிகின்ற வளையல்கள்**
**சிறைகளை உடைத்து விடும்**

என்ற பாடலும்,

**"பத்தினிப் பெண்ணு இவ பார்த்தால் குறிஞ்சி**
**பக்கம் வந்தா நெருஞ்சி**
**எங்கவூரு பெண்ணு அப்போதே சூரியனைக் கட்டி வைச்சாளே"**

போன்ற இப்பாடல்கள் உள்ள திரைப்படத்தில்
**"ஆலிங்கனங்கள் பரவசம் இதில் அனுமதி இலவசம்"**
போன்ற ஆபாசப் பாடல்களும் உண்டு.

பாரதிராஜாவின் ஏனைய திரைப்படங்களிலும் பெண்கள் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றது. பாக்கியராஜ் திரைக்கதை வசனம் எழுதி பாரதிராஜா நெறியாள்கை செய்த **புதிய வார்ப்புகள்** என்னும் திரைப்படத்தில் படத்தின் நாயகி ஊரில் உள்ள பண்பில்லாத ஒருவர் கட்டிய தாலியை அறுத்து எறிந்து விட்டு தனக்கு விரும்பிய வாத்தியாருடன் ஓடி விடுகிறாள். இங்கு பெண்கள் உரிமை வலியுறுத்தப் படுகிறது. தாலி கட்டியவன் கல்லானாலும் கணவன் என்ற நிலை மாறி தனக்கு விருப்பமானவருடன் வாழ வைத்தது. ஆனால் இதே பாக்கியராஜ் கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்த **அந்த 7 நாட்கள்** எனும் திரைப்படத்தில் காதலன் காதலியைப் பிரித்து அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து வைத்த போதும் அவள் காதலன் நினைவாகவே வாழ்வதைக் கண்ட அவள் புருஷன் காதலனை அழைத்து அவளை ஏற்கச் சொல்கிறான். இது தமிழ்ப் பண்பாட்டிற்க ஒவ்வாத செயல். தாலி கட்டியவன் தான் புருஷன் என அவளை ஏற்க மறுக்கிறான் காதலன். இத்திரைப்படம் சொல் லும் கருத்து மனைவி மனதளவில் வேறு ஒருவனுடன் வாழ்ந்தாலும் தாலி கட்டியவனுடன்தான் வாழ வேண்டும் என்கிறது. இத்தகைய திரைப்படங்கள் காணப்படுவதற்குக் காரணம் போலிப் பண்பாடு. போலிக் கலாச்சாரங்கள் என்பனவாகும். பாரதிராஜா வின் இன்னொரு திரைப்படம் **சிவப்பு றோஜாக்கள்**

ஆகும். இது **மூடுபனி** என்னும் திரைப்படக் கதையைப் போன்றதேயாகும். இங்கும் பெண்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். ஆண்கள் மனோவியாதிக் குப் பெண்களே காரணம் என்று சொல்லப்படுகிறது. **மூடுபனி** பற்றிய விமர்சனம் இதற்கும் பொருந்தும்.

**ஜெயகாந்தன்** எழுதித் தயாரித்த இரு திரைப்படங்கள் இங்கு கவனத்திற்கு உரியது. **அக்கினிப் பிரவேசம்** என்னும் சிறுகதை **சில நேரங்களில் சில மனிதர்கள்** என்னும் நாவல் இரண்டையும் இணைத்து ஒரு பிரதி தயாரித்து **சில நேரங்களில் சில மனிதர்கள்** என்னும் திரைப்படம் 1977ம் ஆண்டில் வெளிவந்தது. ஒரு பலவீனமான கணத்தில் யாரோ ஒருவனிடம் தன்னை இழந்து பின் தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறி உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த



யாரோ ஒருவனான பிரபுவைச் சந்தித்து அவனைத் தன் நண்பனாகப் பாவித்து வாழும் கங்கா பெண் பற்றிய சகல தடைகளையும் உடைப்பவளாகச் சித்தரிக்கப் படுகிறாள். தனக்குச் சரியெனப்படுவதைச் செய்யும் தன்னுணர்வு மிக்கவளாக இதில் கங்கா காட்டப் படுகிறாள். இங்கு கங்காவின் தன்னம்பிக்கை முக்கிய மாகக் காட்டப்படுகின்றது. அரசியல் உணர்வு கொண்ட பத்திரிகை நிருபரும் நாடக நடிகையும் வாழ்க்கையில் இணைந்து அது குறித்து விவாதித்துக் கொள்வதும் அதனாலேயே பிரிவதும் பின்னர் மனிதாபிமானத்துடன் சேர்வதும் **ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்** என்னும் திரைப்படக் கதையாகும். இங்கு அவர்கள் தனித்துவங்கள் பேணப்படுகின்றன. நாடக நடிகை சுதந்திரமான கருத்துள்ள பெண்ணாகச் சித்திரிக்கப்படுகின்றாள். அழகியல் உணர்வு, சமூகம் பற்றிய பொறுப்புணர்வு பற்றி இருவருக்கும் வேறுபட்ட கருத்துக்கள் வெவ்வேறு தளங்களில் இருந்த போதும் ஒருவருக்கொருவர் கருத்துக்களில் விட்டுக் கொடுக்க வில்லை. ஒரு முதிர்ந்த பெண்ணாக இருந்த நாடக நடிகை காணப்படுகின்றாள், ஜெயகாந்தன் பெண்ணைப் பொதுவாக சுதந்திரமான கருத்துள்ள முதிர்ந்த பெண்ணாகக் காட்டுவதைக் கவனிக்கலாம்.

### பெண் கலைஞர்கள்

திரைப்பட உருவாக்கத்தில் பெண் கலைஞர்கள் பெரிதும் பங்கேற்று உள்ளார்கள். பெண் கலைஞர்கள் இல்லாத திரைப்படமே இல்லை என்று கூறலாம். முக்கியமானவர்கள் நடிகைகள். இவர்கள் பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கலாம். ஏனைய தொழில் நுட்பக் கலைஞர்களான பெண்களின் பங்களிப்பைக் கவனிக்கலாம்.

பெண்களின் பிரச்சினைகள் பெண்களின் நோக்கில் இருந்து காட்டப்பட வேண்டிய தேவை ஒன்று உணரப் படுகின்றது. ஆண் எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது **அம்பையின்** எழுத்தில் பெண் பற்றிய புதிய பரிமாணம் தெரியவருகிறது. ஆக்க இலக்கியங்களில் மாத்திரம் அல்லாது வெகுசனத் தொடர்புச் சாதனங் களான சினிமா வீடியோப் படங்கள் தொலைக்காட்சித் போன்றவற்றிலும் பெண்களுடைய ஈடுபாடு தற்போது அதிகரித்து வருகின்றது. இதுவரை காலமும் பெண்களது ஆக்கத் திறமைகளுக்கோ, படைப்புக்களுக் கோ அதிக தூண்டுதல் அளிக்கப்படவில்லை. ஆணாதிக்கம் நிலவும் சமூகத்தில் ஆண்கள் பெண் களை நோக்குவதற்கும், பெண்கள் பெண்களையும் அவர்களது பிரச்னைகளை நோக்குவதற்கும் இடையே வேறுபாடு உண்டு. உதாரணமாக சினிமாவில் ஆண் படப்பிடிப்பாளர் தனது நோக்கிலேயே தனது கோணத்திலேயே பெண்களைக் காண்கின்றார். இவை "அவலட்சணமான கோணங்கள்" என்று ஒரு பெண் படப்பிடிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். சினிமாவின் தொழில் நுட்பத்தை பெண்கள் கற்க வேண்டும். அக்கலை வடிவத்தை அவர்கள் கையாள வேண்டும். இவை மூலம் பெண்களது செய்திகள் உலகத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் தமிழில் பெண் நெறியாளர்களால் நெறிப்படுத்தப்பட்ட திரைப்படங்களில் இத்தகைய அம்சங்கள் தெரிய வந்தனவா? இது மிக முக்கியமான கேள்வி. இதற்கு அவர்களுக்குள் சமூகப் பார்வை மிக முக்கியமானது. வெறுமனே வீடுகளிலும் ஸ்ரூடியோக்களிலும் சஞ்சரிப்பவர்களால் இதனை வெளிப்படுத்த முடியுமா? இந்தியாவில் புகழ் பெற்ற ஹிந்தி நடிகை **"ஷபனா அஸ்மி"** பம்பாய் நகரில் சேரி வாழ் மக்களின் குடிசைகள் அகற்றப்பட்ட போது அதனை எதிர்த்து அம்மக்களுடன் இணைந்து போராடி இருக்கிறார். இங்கு சமூகம் பற்றிய பார்வையைக் காணமுடிகிறது. ஹிந்தியில் பெண் இயக்குனர் **அபர்ணா ஷென்** நெறியாண்ட **36 சௌரங்கிலேன்** எனும் ஹிந்தி திரைப்படம் மற்றவர்களின் அன்புக்காக ஏங்கும் ஒரு கிழவியின் கதையைக் கூறுகின்றது. பெண்களின் பார்வையில் இத்தகைய திரைப்படங்கள் எழுவது பெண்கள் பற்றிய புதிய பரிமாணத்தைத் தெரியப்படுத்தும்.

## எதிர்கால அரங்கேற்றம் எவ்வாறு?

# அனுசா சற்குணநாதன்

**இன்றைய** எமது நிலைப்பாட்டை எடுத்து நோக்குமிடத்து, தமிழ் இனத்தினுடைய கலைகள், கலாசாரங்கள் எனத் தொடங்கி அனைத்திலுமே தனித்தன்மை ஒன்றை பேண வேண்டிய சூழலுக்கு நாம் தள்ளப்பட்டு விட்டோம். வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்த பெண்கள் களத்திலே வீர நடை போடுகின்றார்கள். சாதி, சமயம் என்று பிளவுபட்டுக் கிடந்த வர்க்கங்கள் இன்று உண்மையை உணரத் தொடங்கியுள்ளது. இவை இவ்வாறு இருக்க.

இன்று புலம் பெயர் நாடுகளில் நடைபெற்று வருகின்ற அரங்கேற்றங்களில் நிலைப்பாடு எவ்வாறு காணப்படு கிறது என்பதை நோக்கினால், கணபதி ஸ்துதியுடன், தொடங்கி தில்லானா வரை ஆடல் கலை அழகாகக் கையாளப்பட்டிருக்கும், ஒரு சில அரங்கேற்றங்களில் மட்டும், வர்ணம் கீர்த்தனம் என்ற உருப்படிகள் நிறைவு பெற்றபின்பு, "தாயக நினைவுப் பாடல்" என்ற தலைப்பில் ஒரு நடனம் இடம் பெறுகிறது. இது ஒரு வரவேற்கத்தக்க விடயம்தான் அரங்கேற்றங்களில் தாயகம் என்ற அந்த புண்ணிய பூமியில் தானே நாம் இக்கலைகளை கற்றுத் தெளிந்தோம் என்ற சாயல்கூட இருக்காது என்பது மிகவும் மனம் வருந்தப்படக்கூடிய செயல்.



காணப்படும். அதைத் தொடர்ந்து நிருத்திய அப்பியாசங்கள் தொடங்கி, இறுதியில் நிருத்தமும் நிருத்தியமும் இணைந்து நாட்டியமாக மிளிரும். மேடையிலே அரங்கேறுகின்ற ஒரு மாணவி, முருகனைத் தனது காதலனாக எண்ணி ஒரு சப்தத்தையும், கிருஸ்ணனை நினைந்து ஒரு கௌத்துவத்தையும், முக்கிய பகுதியாகிய வர்ணத்திலே சிவனை காதலனாகவும், பிற்பகுதியில் சிவனில் பக்தையாகவும், தன்னை பாவனை செய்து மெய்மறந்து ஆடுவாள். ஆனால் இங்கே தான் எனக்கொரு சந்தேகம். சிவனைக் கற்பனையில் காதலிக்கும் நாயகிகள் ஏன்தான் தாயகத்தைக் காதலிக்கக்கூடாது. அல்லது, தாயகத்திலே போரிலே இறந்து போன தனது நாயகனை நினைவு கூரக்கூடாது? வர்ணம் என்ற உருப்படியை எடுத்துக் கொண்டால், எத்தனையோ வீரர்கள், வீராங்கனைகள் எம்மண்ணில் எழ வில்லையா, அவர்களை ஆடலில் காட்ட ஏன் கால்கள் மறுக்கின்றன? கற்பனையில் கண்ணனை காதல் செய்வதை விட, காதலனையே கண்ணனாகப் பார்க்கலாமே?

ஏதோ ஒரு கால கட்டத்தில் அன்றைய காலத் தேவைகள் கருதி முன்னோர்கள் பாடல் இயற்றி முன்பு பல கட்டுரைகளிலும் இதுபற்றிப் பேசப்பட்டது தான். பரதக் கலை என்பது இரண்டு விதமான வடிவங்களில் புதிய வடிவம் வேண்டி நிற்கிறது. (1) பரதக் கலையை பயன்படுத்தி புதியதொரு கலைப் பரிமாணத்தை எவ்வாறு தோற்றுவித்தல்?

(2) அரங்கேற்ற நிகழ்வுகளில் எமது சொந்தச் சித்திரங்களை எவ்வாறு பரத நாட்டியத்தில் அந்தஸ்துப் படுத்துவது? இவற்றிலே முதலாவது வடிவம் எனக் கூறுகின்றபோது, "பரதக் கலையை பயன்படுத்தி புதிதாக ஒரு கலைப்பரிமாணத்தை எவ்வாறு தோற்றுவித்தல் என்பதை எடுத்துக் கொண்டால் கடந்த காலங்களில் வந்த கட்டுரைகள் முழுவதும், இந்த வகையானதே. ஆனால் இரண்டா வது விடயமான அரங்கேற்ற நிகழ்வுகளில் எமது சொந்தச் சித்திரங்களை எவ்வாறு பரத நாட்டியத்தில் அந்தஸ்த்துப்படுத்துவது? என்பதுதாதன் இன்றைய முக்கிய தேவையாகும்.

காரணம் பரத நாட்டியம் என்பது நிருத்தம், நிருத்தியம் என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதிலே நிருத்தப் பகுதி என்பது தனிமையான உடல், கண், அசைவுகளை மட்டும் கொண்டது. ஆரம்ப காலப் பயிற்சிகள் அனைத்தும் கூட தனி நிருத்தமாகவேதான் அதற்கேற்ப பரதம் வடிவமைப்புச் செய்யப்பட்டதெனில், இன்றைய தேவையையும் நாம் பூர்த்தி செய்யத்தானே வேண்டும். காலத்துக்கேற்ற கருத்துக்கள் தோன்ற வேண்டும். அண்மையிலே இப்படி ஒரு கீர்த்தனம் கேள்விப்பட்டேன். அடானா இராகத்தில்

**வரிப் புலிப்படை — ஒரு**<br>
**சரித்திரம் படைத்தது**<br>
**எரித்திடும் கணை கொண்டு**<br>
**எதிரியை உடைத்தது?**

அருமையாக இருந்தது இந்தப் பல்லவி. இவ்வாறு பல கீர்த்தனைகள், பல பதங்கள், ஏன் கரும்புலி புகழ்பாடும் கௌத்துவம், கூட வெளியாகியுள்ளது.

**தத்தித் திருகுணக்க திருகுணக்க ஜம் ஜம்**<br>
**தத்தித் திருகுணக்க த்ருகுணக்க ஜம் ஜம்**<br>
**காரிருள் மழையென போய் அவர் பொழிந்தார்**<br>
**தாய்த் தமிழ் மீதினில் கருணையைச் சொரிந்தார்**<br>
**ஊதிய தீயென தீயிடை ஒளிந்தார்**<br>
**பேரெழில் ஜோதியாய் ஓங்கினர் அம்மா**

ஆரபி இராகத்திலே இவ்வாறு இக்கௌத்துவம் தொடர்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் ஏற்று அரங்கேற்றங்களில் எமது நியாயமான போராட்டத்

தை, எமது இனத்தின் தனித்துவத்தை, எம் கலைஞர்களிடம் காணப்படுகின்ற திறமையை எல்லா வற்றையும் எமது தேசியத்தினூடாக வெளிப்படுத்த வேண்டும்.
எதிர் காலத்தில் நிகழ்கின்ற அரங்கேற்றங்களில் முற்று முழுதாக நாம் யார் என்பதை பிரதிபலிக்கின்ற வகையில் அனைத்து உருப்படிகளும் அமையப் பெறுவதற்காக நடன ஆசிரியர்கள் முன்வந்து உழைக்க வேண்டும்



இன்று அரங்கேற்றங்களில் அலாரிப்பு ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், கீர்த்தனம், பதம், தாயக நினைவு என்ற வரிசையிலேயே எம்மண்ணையும், மண்ணின் மாவீரர்களையும் நினைவு கூருகிறோம். இதிலே முக்கிய உருப்படிகள் எல்லாம் முடிந்த பிறகு அலங்கார நடனங்கள் என்ற நடனங்கள் இடம் பெறும் இடத்தில் தான், நாம் தாயகத்தை கௌரவிக்கின் றோம். ஆனால் அப்படி அன்றி அரங்கேற்ற மேடைகளில் முக்கிய மான உருப்படிகளில் எம்மை நாம் அடையாளப்படுத்திக் காட்ட கூடியதாக அரங்கேற்ற உருப்படிகளை தேடி உருவாக்க வேண்டியவர்களாகின் றோம். அப்போதுதான் நாமும், நாம் கற்ற கலைகளும் முழுமை பெறும் என்பதில் ஐயமில்லை.
பரதம் புதிய வடிவாக புதுப் பொலிவுடன் பிரசன்னமாகி, தமிழ் தாயவள் பாதங்களை பணிய வேண்டும். இங்கே பரதத்தின் அடிப்படைத் தன்மைகளோ, அல்லது அழகோ கெட்டுப் போகாது, காரணம் பாடல்களுக்குத் தான் நாட்டியம் செய்யப்படுகின்றது. **"பத்மா சுப்ரமணியம்** ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார், "ஸ்ருங்காரம் மட்டும் பரதமாகாது" என்றால்... பரதம் என்பது வானளாவ பரந்து செல்லும் என்பதுதான் இதன் பொருள். மனிதரின் உள்ளத்தில் தோன்றும் எந்த உணர்வையும் பாடுவதற்கென ஏற்ற இராகங்கள் இருக்கின்றதே. இராகத்திற்கேற்ப பாடலை இசையமைத்து, அதற்கேற்ப நடன வடிவமைப்புச் செய்யப்பட்டால் அது ஒரு பூரண உருப்படியாகும். இவ்வாறான புதுப் புது உருப்படிகளை கொண்ட, ஒரு உருப்படியான அரங்கேற்றம் புலத்திலே எப்போது நிகழும். ■

# ஆசனம் யாருக்கு

யமுனா ராஜேந்திரன்

இந்திய அரசியலை புரிந்து கொள்வதற்கு நிரம்பவும் சிக்கல் வாய்ந்தது. எதிரிகள் நண்பர்கள் ஆவதும் நண்பர்கள் எதிரிகளாவதும் ஓரிரவிலேயே நடந்துவிடும். தீர்க்க தரிசனம் என்பது எதுவும் இந்திய அரசியலில் செல்லுபடியாகாது.
மதவாத எதிர்ப்பினை தனது மிக அடிப்படையான நிலைப்பாடாகக் கொண்டிருந்த தி.மு.க 'மத வாதத்தைவிட ஊழல் மிகக் கொடுமையானது' என பாரதிய ஜனதா அரசிற்கு ஆதரவாக நிற்க வேண்டி இருக்கிறது. வெளிப்படையில் அல்லாத மதவாத முகத்தை கொண்டுள்ள காங்கிரஸை, கம்யூனிஸ்ட்டுக்கள் தவிர்க்க இயலாது பாரதிய ஜனதாவிற்கு எதிராக ஆதரிக்க வேண்டி இருக்கின்றது. எந்த விதமான கூச்ச நாச்சமுமின்றி தனது தனிநபர் ஆசைகளை அரசியல் ஆக்கி நாறடித்து விட்டிருக்கிறார் ஜெயலலிதா. லல்லுபிரசாத், ராப்ரி தேவி, மாயாவதி, வைகோ, ராமதாஸ் அனைவருமே பகடைக்காய்களாய் இருக்கின்றனர். பூர்சுவா அரசியலில் பதவி கொண்டு சமரசம் மேற்கொண்டிருக்கிறார்கள் தலித் அரசியல் வாதிகள்.
உலக அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி எவரும் நினைத்தபடி அரசியல் மேற்கொள்ள முடியாது. நிலவும் அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு ஏற்பவே காய்கள் நகர்த்தியாக வேண்டும். அரசியல் யுத்த தந்திரம், தந்திரேபாயம் என்பது இதனது அரிச்சுவடியாக இருக்கும். இஸ்லாமிய இராச்சியங்களும், கிறிஸ்தவ இராச்சியங்களும் உலகில் இருக்கும் சூழலில் இந்து இராச்சியம் நிலவுவதே தமது கொள்கை என ஆட்சி செய்தனர் பிஜேபி கட்சியினர். இந்து மத ஒருமைப்பாட்டின் அடிப்படையில் ஒரு அணு ஆயுத வல்லரசாகவும் தன்னிறைவுள்ள நாடாகவும் இந்தியாவை உருவாக்குவதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆயினும் நிலவும் அரச அதிகார அமைப்பிலிருந்துதான் அவற்றை நிறைவேற்ற முடியும். நூறு கோரிக்கைகள், நூறு ஆசைகள், நூறு சந்தர்ப்ப வாத வேசங்கள் என்பவற்றோடு சேர்ந்து கூட்டு அரசை அமைத்தார்கள். ஆர்.எஸ்.எஸ், விசுவ இந்து பரிசத் போன்ற மத வாத அமைப்புக்கள் முஸ்லீம், கிறிஸ்தவ மக்களைக் கொல்வதில் ஆர்வம் காட்டின. அணு ஆயுதப் பரிசோதனை பாகிஸ்தானிடம் பதட்டத்தை ஏற்படுத்தியது. இந்தியா எங்கும் ஜாதிய மோதல்கள் ஆயுத மோதல்களாக வலு அமைந்தன. இந்தியாவின் உள்ளிலும் வெளியிலும் பாரதிய ஜனதாவின் ஆட்சிக்கு நெருக்கடிகள் தோன்றின. இந்த நெருக்கடிகளை பதவி பேரமாக்கினார்கள். அரசிலிருந்த பெரும்பாலான உதிரிக்கட்சியினர். உள்விவகாரம், நிதி, பாதுகாப்பு அமைச்சுக்களை தனக்குக் கோரினார் ஜெயலலிதா. தனது சொந்த நோக்கங்களுக்காக மாநில மக்களைச்

தொடர்ச்சி 38ம்

# இப்போது நாம் கணனி உலகத்தில் வாழ்கிறோம்.

**இப்போது** நாம் கணனி உலகத்தில் வாழ்கிறோம். குழந்தைகள் விளையாடும் நினெண்டோ செயலிகள் கணனியின் செயற்பாடுதான். கையில் நினெண்டோ பொறிகளை வைத்துக்கொண்டு குத்துச் சண்டை முதல் கால் பந்தாட்டம் வரை உலகின் எல்லா விளையாட்டுக்களையும் விளையாட முடியும். நினெண்டோ காலம் முடிந்து கையடக்க நாய், பூனை, மீன் முதலான வளர்ப்புப் பிராணிகளைக் கையில் வைத்துக் கொண்டு அலையும் காலமொன்றும் வந்து போனது. கண்னிப் பொறியான இதனை வைத்து மனிதன் உருவாக்குவதற்கு முன் வாழ்ந்து மறைந்த டைனசார்களைக் கூட வளர்க்க முடிந்தது.

டைனசார்களைப் பையில் போட்டுக் கொண்டு அலைவதில் குழந்தைகளுக்கு மட்டில்லா மகிழ்ச்சி தான். இவையெல்லாம் கணனியை விளையாட்டு ஊடகமாக பயன்படுத்தும் முறையாகும். ஆனால், மேசைக் கணனி செயல்முறைக்கு வந்த பின் கணிப் பொறி கல்வி புகட்டும் ஊடகமாக மாற்றம் கொண்டது. கணனி செயலிகள் மூலம் மொழி கற்றுக் கொடுக்கவும் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் சொல்லிக் கொடுக்கவும் ஏதுவானது.

உலக வைய விரிவு வலை கணனிக்குள் செயல்படத் தொடங்கியது தகவல் புரட்சியின் உச்ச கட்ட வளர்ச்சியாகும். மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று வேண்டிய தகவல்களைச் சேகரிப்பது போய் நூலகமும் அது கொண்ட தகவல்களும் வைய விரிவு வலைவழியாக வீட்டின் மேசையிலிருக்கும் கணனி திரைக்கு வந்தன. பல மேலை நாடுகளில் தொலை தூரக் கல்வியென்பது கணனி வழியாகச் செயல் பாட்டிற்கு வந்தது. தகவல் புரட்சி வெடித்த போது தான் பண்டைய தமிழ் கிழவி அவ்வை சொன்ன "கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு" என்பது பலருக்குப் புரிந்தது.

வைய விரிவு வலையில் நுழைந்து தகவல் சேகரிப்பதை "வலை சருக்கல்" என்று சொல்வார்கள். உதாரணமாக, இசை என்ற தலைப்பில் தேடத் தொடங்கினால் உலகில் உள்ள அத்தனை வகையான இசைகளுக்கும் வழித்தடங்கள் கிடைக்கும். நாம் தேடுவது என்ன என்ற தெளிவு இல்லாத வைர வைய விரிவு வலை மாயா பஜார் போல் எங்கெங்கோ இட்டுச் செல்லத் தொடங்கும். இதை வேறொரு வகையில் சொல்வ தானால் பள்ளிக்குச் செல்லும் மாணவன் கழைக் கூத்தைப் பார்த்துக் கொண்டு பாடத்தை விட்ட கதையாகச் சொல்லலாம். ஏனெனில், வார்த்தை களுக்குப் பல பொருள் இருப்பதாலும், உலகமென்பது நல்லதும் கெட்டதும் நிறைந்திருப்பதாலும் படிக்கக் கிளம்பிய மாணவன் ஏதாவது ஒரு பண்டக சாலையில் சாமானை வாங்கிக் கொண்டோ, நுழையக் கூடாத பெரியவர் விஷயங்களில் மயங்கி நின்று கொண்டோ இருக்க வேண்டியது வந்து விடும். எனவேதான் வைய விரிவு வலையிலும் சில கட்டுப் பாடுகளைக் கொண்டுவர வேண்டிய அவசியம் தேவைப்படுகிறது. இதை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் சட்ட மாகவே கொண்டு வந்திருக்கிறார்.

கணனிக் கல்வியில் பேசுவது போலேயே பாடல் களையும் உரையாடல்களையும் பதிவு செய்து ஆசிரியருக்கு அனுப்பி விடை பெற்றுக் கொள்ள முடியும். மொழி கற்பதற்கு இது மிகவும் அவசியமான ஒன்றாகும். தமிழ் பேசவும் கற்கவும் விரும்புவோர் கீழ்கண்ட வலைப்புலத்தில் இதன் செயற்பாட்டை அறியலாம்.

http://www.iupui.edu/~rravindr/tamil.html

தமிழை எழுதவும் கற்கவும் விரும்புவோர்கள்

http://www.tamil.net/learn-tamil/

http://ww.sas.upenn.edu/~vasur/project.html

இந்த வலைப்புலங்கலினால் பயன் பெறலாம்.

கணனியில் தமிழ் கல்வி என்பது இன்னும் மழலை பருவத்தில் தான் உள்ளது. கணனி பாவிக்கும் பழக்கம் தமிழர்களிடையே பரவலாக்கப்படும் பொழுது தமிழ் கல்வி ஒவ்வொரு வீட்டிலும் தவழ வாய்ப்புண்டு. இசை, சமயம், சினிமா இவை தமிழ் வைய விரிவு வலைப் புலங்களில் தாராளமாகக் காணக் கிடக்கின்றன. குழந்தைகளை முன்னிறுத்தி சைவ சமயச் சிந்தனை களைப் புகட்டுவதில் இரண்டு வலைப்புலங்கள் முன்னணியில் இருக்கின்றன. ஒன்று http://www.malaysia.net/people/subas/ என்பதும், மற்றொன்று http://www.gold.ac.uk/ ~siva என்பது மாகும்.

குழந்தைகளுக்கென்று ஒரு இலக்கியப் பக்கம் உருவாக்கும் முயற்சி கீழ்கண்ட வலைப்புலத்தில் காணக் கிடைக்கின்றது.

http://www.angelfire.com/ak/nkannan/

பெரியவர்களுக்கென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் செயல்படும் தமிழ் இணையத்தில் (http://www.tamil.net/) அவ்வப்போது சிறார்களின் குரலும் கேட்பதுண்டு.

உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கூடும் சங்கமாக வைய விரிவு வலை மாறும் காலத்தில் குழந்தை களுக்கென்று பிரத்தியேக நிழல் வெளிப் பள்ளிகள் உருவாகும். குழந்தைகள் இலக்கியமும் இசைப் பள்ளி களும் சமய வகுப்புக்களும் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் தமிழில் தவழத் தொடங்கும். இந்த நிகழ்வு நாம் எதிர் பார்ப்பதை விட விரைவில் நடந்தேறும் சாத்தியக் கூறுகள் உள்ளன. அப்போது பாரதி சொன்ன வார்த்தையை மாற்றிப் பாட வேண்டி வரும். "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்" என்பது போய், எட்டுத் திக்கின் கலைச் செல்வங்களும் கணனி வழியில் வீட்டிற்கு தானே வந்து சேரும். அது தமிழின் பொன்னாள். ■

நா.கண்ணன்

## நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| காலை 5.00 | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி | திருப்பள்ளி எழுச்சி |
| காலை 5.30 | கீதாஞ்சலி | வாத்திய விருந்து | கீதாஞ்சலி | வாத்திய விருந்து | கீதாஞ்சலி | வாத்திய விருந்து | கீதாஞ்சலி |
| காலை 6.00 | நற்சிந்தனை | நற்சிந்தனை | நற்சிந்தனை | நற்சிந்தனை | நற்சிந்தனை | நற்சிந்தனை | நற்சிந்தனை |
| காலை 6.05 | பொழுது புலர்ந்தது | காலத்தால்அழியாதகானங்கள் | பொழுது புலர்ந்தது | காலத்தால்அழியாதகானங்கள் | பொழுது புலர்ந்தது | காலத்தால்அழியாதகானங்கள் | பொழுது புலர்ந்தது |
| காலை 6.30 | பாரதி பாக்கள் | ஆனந்தகானங்கள் | பாரதி பாக்கள் | ஆனந்தகானங்கள் | பாரதி பாக்கள் | ஆனந்தகானங்கள் | பாரதி பாக்கள் |
| காலை 7.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| காலை 7.05 | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| காலை 7.15 | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து |
| காலை 7.30 | ஈழகானம் | ஈழகானம் | ஈழகானம் | ஈழகானம் | ஈழகானம் | ஈழகானம் | ஈழகானம் |
| காலை 8.00 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| காலை 8.30 | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் |
| காலை 8.45 | பக்திப்பாடல்கள் | மன்றப்பலகை | பக்திப்பாடல்கள் | மன்றப்பலகை | பக்திப்பாடல்கள் | மன்றப்பலகை | பக்திப்பாடல்கள் |
| காலை 9.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| காலை 9.05 | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் | தேடிவரும் தென்றல் |
| காலை 10.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| காலை 10.05 | இசையும் கதையும் | பத்திரிகை உலகம் | கேட்டிருப்பாய் காற்றே | புதுமைப்பெண்கள் | ஆத்மகானம் | தேயா நெஞ்சம் | கிறிஸ்தவ சிந்தனை |
| காலை 10.30 | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் | இசையூட்டம் | ஜேர்மன் குரலை |
| காலை 11.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| காலை 11.05 | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை | நெஞ்சில் நிறைந்தவை |
| பகல் 12.00 | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை | பிரார்த்தனை வேளை |
| பகல் 12.02 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| பகல் 12.15 | நாமும் நலவாழ்வும் | சிரித்திரன் | தமிழ் இனி | அறிவியல் அரங்கம் | மருத்துவ மஞ்சரி | கேள்வி நேரம் | அட்டில்கூடம் |
| பகல் 1.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| பகல் 1.05 | விவேகச்சித்திரம் | கதைசொல்லும்காலம் | சிந்தனைச்சாரல்கள் | மணவாசனை | இசையூட்டம் | தமிழ் இனி | மருத்துவ மஞ்சரி |
| பகல் 1.30 | மன்றத்து தேயா | முத்தாரம் | உரிமை எங்கே? | மன்றத்து தேயா | கடி - கடி | இசையும் கதையும் | கண்டுபிடியுங்கள் |
| பகல் 2.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| பகல் 2.05 | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் | உங்கள் விருப்பம் |
| பகல் 3.00 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| பகல் 3.30 | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் |
| பகல் 3.45 | ஈழத்துப்பாடல்கள் | மெல்லிசை | ஈழத்துப்பாடல்கள் | மெல்லிசை | ஈழத்துப்பாடல்கள் | மெல்லிசை | ஈழத்துப்பாடல்கள் |

நீங்கள் புலம் இதழின் சந்தாதாரர் ஆகிவிட்டீர்களா?
இல்லையெனில் இப்போதே இந்தக் கணமே ஆகிவிடுங்கள். புலம் பலம் வளம் பெற அதுவே தக்கவழி.

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| மாலை 4.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| மாலை 4.05 | முகிழ்ப்பு | ஊர்வலம் | முகிழ்ப்பு | வாரம் ஒரு வலம் | முகிழ்ப்பு | குறுக்கெழுத்துப் போட்டி | கலையரங்கம் |
| மாலை 4.30 | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | குறுக்கெழுத்துப் போட்டி | இசையால் வசமாக |
| மாலை 5.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| மாலை 5.05 | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் | அந்திவரும் நேரம் |
| மாலை 6.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| மாலை 6.05 | ஒட்டுவெட்டு | பாரதவலம் | வணக்கம் ஐபிசி மாமா | ஜேர்மன் குரலை | என்றோ ஒருநாள் எழும் | நெஞ்சுறு கீதம் | வணக்கம் ஐபிசி மாமா |
| மாலை 6.30 | ஒட்டுவெட்டு | வேண்டாம் அபகரம் | வணக்கம் ஐபிசி மாமா | புதியதோர் உலகம் செய்வோ | என்றோ ஒருநாள் எழும் | நெஞ்சுறு கீதம் | வணக்கம் ஐபிசி மாமா |
| மாலை 7.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| மாலை 7.15 | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து | பிறந்தநாள் வாழ்த்து |
| மாலை 7.30 | இல்லாமிய சிந்தனை | சிவயோக சிந்தனை | கிறிஸ்தவ சிந்தனை | உன்னையே நீ அறிவாய் | அறநெறி அறிவோம் | தொடுத்துப்பாடு | கவிதை அரங்கம் |
| மாலை 8.00 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| மாலை 8.30 | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் | அறிவிப்புகள் |
| மாலை 8.45 | மெல்லிசை | மெல்லிசை | மெல்லிசை | மெல்லிசை | பக்திப்பாடல்கள் | மெல்லிசை | மெல்லிசை |
| இரவு 9.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| இரவு 9.05 | யன்னல்களைத் திறவுங்கள் | அறிவியல் அரங்கம் | நாமும் நலவாழ்வும் | பிரசவகனம் | தேனிசைத் தென்றல் | புதுவெள்ளம் | 3திபிடம்300புள்ளிகள் |
| இரவு 9.30 | உரிமை எங்கே? | கவிதை சிந்தும் நேரம் | பேசாப் பொருள் | பிரசவகனம் | தேனிசைத் தென்றல் | புதுவெள்ளம் | 3திபிடம்300புள்ளிகள் |
| இரவு 10.00 | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் | செய்திச் சுருக்கம் |
| இரவு 10.05 | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | சிரித்திரன் | நெடும் புனல் |
| இரவு 10.30 | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | இரவின் தாலாட்டு | முத்தாரம் | நெடும் புனல் |
| இரவு 11.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| இரவு 11.15 | இசைக்கச்சேரி | ராகமாலிகை | இசைக்கச்சேரி | மன்றத்து நேயர் | இசையும் கதையும் | ஈழத்து இசைமாலை | புதுவெள்ளம் |
| இரவு 12.00 | கவிதை சிந்தும் நேரம் | 3திபிடம்300புள்ளிகள் | பிரசவகனம் | தூங்காத கண்கள் | உங்கள் விருப்பம் | தூங்காத கண்கள் | மண்வாசனை |
| இரவு 12.30 | தொடுத்துப்பாடு | 3திபிடம்300புள்ளிகள் | பிரசவகனம் | தூங்காத கண்கள் | உங்கள் விருப்பம் | தூங்காத கண்கள் | இசையும் கதையும் |
| இரவு 01.00 | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் | சிற்றலைவரிசை நிகழ்ச்சிகள் |
| இரவு 02.00 | ஒட்டுவெட்டு | தமிழ் இனி | வணக்கம் ஐபிசி மாமா | சிரித்திரன் | துள்ளிசை | புதுவெள்ளம் | என்றோ ஒருநாள் எழும் |
| இரவு 02.30 | இசையால் வசமாக | நாமும் நலவாழ்வும் | வணக்கம் ஐபிசி மாமா | இசைப்பூட்டம் | மருத்துவ மஞ்சரி | புதுவெள்ளம் | புதுமைப்பெண்கள் |
| காலை 03.00 | இசையமுதம் | கேள்வி நேரம் | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் | இசையமுதம் |
| காலை 03.30 | இசை விருந்து | வாத்திய விருந்து | இசை விருந்து | இசை விருந்து | வாத்திய விருந்து | இசை விருந்து | இசை விருந்து |
| காலை 04.00 | தேவாரம் | தேவாரம் | தேவாரம் | தேவாரம் | தேவாரம் | தேவாரம் | தேவாரம் |
| காலை 04.30 | சுப்ரபாதம் | சுப்ரபாதம் | சுப்ரபாதம் | சுப்ரபாதம் | சுப்ரபாதம் | சுப்ரபாதம் | சுப்ரபாதம் |

Astra Satellite - Movie Channel    Transponder - 18
Audio - 7.56    Video - 11.479

இலங்கை - இந்திய - தென்னாபிரிக்கா - கிழக்கு நாடுகளுக்கான விஷேட ஒலிபரப்பு தினமும் இடம்பெறுகிறது.
லண்டன் நேரம் நள்ளிரவு 1 மணிக்கும் ஏனைய ஐரோப்பிய நகர நேரம் அதிகாலை 2 மணிக்கும்.

SW 41 - 7150 KHZல்
இலங்கையில் காலை 6 மணிக்கும், ஈழத்திலும், இந்தியாவிலும் காலை 5.30 மணிக்கும் சிற்றலையில் ஐ.பி.சி தமிழ் ஒலிபரப்பைக் கேட்கலாம்.

முகவரி:
IBC Tamil , P.O.BoX 1505,
London SW8 2ZH, U.K.

ஆக்கங்களை அந்தந்த நிகழ்ச்சித் தலைப்புகளை குறித்து அனுப்பி வையுங்கள்.

தொலைபேசி இலக்கம்: 00441 71 787 8000
தொலை மடல் இலக்கம்: 00441 71 787 8010
தொலைபேசி நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்கு பற்ற அழைக்கவேண்டிய இலக்கம்:
0044 171 564 4444

# இலங்கையர்கோன்

என் எட்டு வயதின் ஆச்சர்யத்தால் அகன்ற கண்களுடன் பார்க்கும் பொழுது இருபது வயது கடந்த என் மைத்துனியைப் போல அழகான பெண் இந்த வையகத்தில் இருக்க முடியாது என்றே தோன்றிற்று. ஹெலன், சீதை, கிளியோப்பாற்றா முதலிய உலகப் பிரசித்தி பெற்ற அழகிகளைப் பற்றியெல்லாம் அந்த வயதிலேயே கேள்வியுற்றிருந்தேன். அவர்கள் எல்லாம் என் மைத்துனியிடம் பிச்சை வாங்க வேண்டும்; அல்லது அவர்கள் எல்லாருடைய அழகையும் வேடிக்கை பார்க்கும் ஒரு விதி சேர்த்து சமைத்துவிட்ட ரூபமோ அவள்! பளிங்குக் கன்னங்களின் மேல் பதறிச் சிறகடிக்கும் கருங்கண் இமைகள் அவைகளின் மேல் குவளையின் கருமையைச் சாறாக்கி வடித்து யாரோ ஒரு அழகுக் கலைஞன் மெல்லியதாக வளைந்து வரைந்து விட்டது போன்ற புருவங்கள் அவைகளின் மேல் வெண்பிறை நுதல்.




நான் மெய்ம்மறந்து அவளையே கண் கொட்டாமல் பார்த்தபடி உட்கார்ந்து இருந்தேன். அவள் தன் நீண்ட கருங் கூந்தலை வாரிக் கொண்டிருந்தாள். சீப்பின் பற்கள் சிதறிவிடும் படி அத்தனை அடர்த்தியாகவும் இருந்தது அவளுடைய கூந்தல்.

"என்னடா, அப்படிப் பார்க்கிறாய்?"

நான் மாங்காய் திருடுகையில் கையுங் களவுமாய்ப் பிடிபட்ட சிறுவன் போல் அலறி அடித்துக் கொண்டு எழுந்து நின்றேன். என் சேப்பில் இருந்த கண்ணாடி 'மாபிள்'கள் அலங்கோலமாகச் சிமெண்ட் நிலத்தில் விழுந்து சிதறின. அத்துடன் என் கனவும் கலக்கமும் கலைந்தன.

"ஒண்டும் இல்லை".

"பின்னை ஏன் அப்பிடி என்னை விழுங்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டிருந்தாய்?"

"உம்மை எப்ப நான் பார்த்தனான்? அந்தச் சுவரிலை இருக்கிற பல்லியை அல்லவோ பார்த்துக் கொண்டிருந்தேன்."

"இல்லை, என்னைத்தான் நீ பார்த்தாய்"

"உம்மிலை என்ன கிடக்குது பார்க்கிறதுக்கு! ஓகோ, அப்பிடியோ உமக்கு யோசனை?"

"ஏன்டா, நான் வடிவில்லையே?"

சிறுவனாகிய என்னுடன் எதுவும் பேசலாம் என்ற எண்ணம் போலும் அவளுக்கு. தான் அழகானவள் என்று அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. அத்துடன் அதைக் குறித்து இறுமாப்பும்....

"சொல்லேன்டா; நான் வடிவில்லையே?"

"எனக்கு அதெல்லாம் தெரியுமே?"

"இந்த வயதிலை சினிமாப்படம் எல்லாம் பார்க்கிறாய்— நாவல்ஸ் புத்தகம் எல்லாம் படிக்கிறாய். இது மட்டும் தெரியாமல் கிடக்கே உனக்கு? சொல்லு மச்சான்" என்று குழைந்தாள்.

அவள் என்னைத் திடுக்கிட வைத்ததற்காக அவள்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முனைந்தேன்.

"அதெல்லாம் என்னை ஏன் கேட்கிறீர்? மச்சாள், என்ரை பெரியண்ணை இண்டைக்குப் பின்னேரம் வந்திடுவார்; அவரைக் கேளும், நீர் வடிவோ வடிவில்லையோ எண்டு. அவர் நல்லாய்ச் சொல்லுவார்?"

"போடா! குரங்கே, சனியன்! இனி அடிதான் வாங்கப் போறாய் என்னட்டை!"

அவள் கன்னங்கள் சிவந்தன— நாணம், கோபம் மகிழ்ச்சி, எதுவோ நான் அறிந்தேனோ? அவள் தலை சீவிக் கொண்டை போட்டு விட்டபடியால், கண்ணாடியை நகர்த்திவிட்டு மான் போல் துடித்தெழுந்து நின்றாள். அவள் கையிலே நீளமான தடித்த சீப்பு இருந்தது. நான் சிறிது தூரத்தில் போய் விலகி நின்று கொண்டேன். சிறுவர்களுக்கு இயல்பாக உள்ள சுபாவத்தின்படி அவள் மனத்தை மேலும் கிளறிவிட முனைந்தேன்.

"சும்மா கணக்கு விடாதையும், மச்சாள்! அண்ணன் இஞ்சை வந்தால் அறைக்கைபோய் ஒளிச்சுக் கொண்டு யன்னற் சீலையை நீக்கி பார்க்கிறது எனக்குத் தெரியாதோ?"

அவள் திடீரென்று சிரித்து விட்டாள்.

"அட குரங்கு குட்டி! உனக்கு இதெல்லாம் எப்படியடா தெரியும்? சரி வா, இவ்வளவு நேரமும் மாபிள் அடிச்சுக் களைச்சுப் போனாய். இனி கால் முகம் கழுவிப் போட்டு வந்து சோத்தைத்தின்!"

அவள் பேச்சை மாற்ற முயன்றாலும் நான் விடவில்லை.

"அதுகும் தெரியும். இன்னும் ஒரு மாதத்தையால், என்ரை அண்ணன் உம்மைக் கலியாணம் முடிக்கப் போறார் எண்டதும் தெரியும்!"

"அட குரங்கே....!"

அவளுடைய குரலில் கோபம் இல்லை. எல்லை இல்லாத ஒரு குதூகலம்தான் தொனித்தது. தனிக் கறுப்பு வளையல் அணிந்த தன் வெண்ணிறக் கை ஒன்றை மணிக்கட்டுடன் முடித்து தன் துடி இடையில் வைத்துக் கொண்டு என்னைத் தன் அகன்ற கருவிழிகளால் உற்று நெடு நோக்கு நோக்கினாள். உண்மையில் என்னைத்தான் நோக்கினாளோ அல்லது

தன் மனக்கண்களால் என் முகச்சாயல் கொண்டிருந்த..?

அவள் நோக்கு எனக்குச் சங்கடமாக இருந்தது. என் கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

"மச்சாள், எனக்குப் பசிக்குது. இப்ப சோறு தாறீரா அல்லது..."

அவள் மோனம் கலைந்தது.

"வா" என்றாள் அன்புகனிய, "முட்டைப் பொரியலும் சோறும் தாறன்..."

அவள் பெயர் கர்ணகை; என் பெயர்...? அது இந்தக் கதைக்குத் தேவையில்லை.

என் அண்ணாவின் பெயர் சண்முகதாஸன். சுருக்கமாக எஸ்.தாஸன் என்று வைத்துக் கொண்டிருந்தார். அவர் பீ.ஏ.பாஸ் பண்ணிவிட்டு அடுத்த ஊரில் ஒரு கலாசாலையில் உபாத்திமைத் தொழில் செய்து கொண்டிருந்தார்.

கர்ணகை சிறுவயதிலேயே தாயை இழந்து விட்ட கன்னி. தந்தையின் கண்ணுட் கருமணி. அவளுக்காக அவர் மறுவிவாகமே வேண்டாம் என்று சொல்லி விட்டார். அவர் என்னுடைய அம்மாவின் ஒரே தமையன். அவர் ஊர்ப் பள்ளிக் கூடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். அதில் கிடைத்த வேதனம் அவர்கள் இருவருக்கும் போதுமானது. தன் மகளுக்கென அதில் மீதம் செய்து பத்தாயிரம் ரூபாய் பணமாக வங்கியில் போட்டு வைத்திருந்தார். அத்துடன் வீடும் வளவும் சிறிது வயல் நிலமும் அவருக்குச் சொந்தம்.



எல்லாம் தன் மகளுக்கு என்றே வைத்திருந்தார். எங்கள் வீட்டில் என் அம்மா வைத்ததுதான் சட்டம். என் தந்தை காசு தேடும் யந்திரம்... அவ்வளவுதான். என்தாய் எங்கள் வீட்டை ஒரு சிற்றரசி போல ஆட்சி செய்தபடியால் சிறு வயதில் எனக்கு என் தந்தையின் அன்பு கிடைக்கவில்லை.

அவர் எனக்கு என்றும் தூரத்துப் பச்சை.. ஏதோ காற்சட்டை, கோட், டை, சப்பாத்து, தொப்பி முதலியன காலையில் அணிவார். பிறகு மாலையில் வந்து அவைகளைக் களைந்து வைத்துவிட்டு ஒரு மலிந்த எட்டுமுழ வேஷ்டியை இரண்டாக மடித்து இடுப்பில் கட்டிக்கொண்டு பத்திரிகை பார்ப்பார். சம்பள நாளன்று தம் கையிற் கிடைத்த பணத்தை என் தாய் கையில் வைத்துவிட்டு, வீட்டு விவகாரம் எதிலும் சிரத்தை இல்லாமலே இருந்து விடுவார்.

எங்களில் எல்லாமாக எட்டுச் சகோதரர்கள். பெண்கள் அறுவர். ஆண்கள் இருவர். அண்ணன் தான் எல்லாரிலும் மூத்தவர். நான் கடைக்குட்டி. இடையில் ஆறு பெண்கள். என் அக்காமார் என் காதுகளைப் பிய்த்து எடுத்து என்னைத் தங்களுடைய சேவகனாக நடத்தினார்கள். நூற்பந்து வாங்கி வா, ஊசி வாங்கிவா, சட்டைத்துணி வாங்கி வா, அது வாங்கி வா இது வாங்கி வா என்று எல்லாம் ஏவி என்னை ஒரு அடிமை போல் நடத்தினார்கள்...

அதனால்தான் நான் என் கர்ணகை மச்சாளிடம் போய் அண்டுவேன்...

என்னுடைய அண்ணனுக்கும் கர்ணகை மச்சாளுக்கும் கலியாணம் நடக்கப் போகிறதே, அதன்பிறகு அவள் எங்கள் வீட்டுக்கு வந்து விடப் போகிறாளே என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டதும் என் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியினால் துள்ளி, என் அக்காமாருக்கு இதனால் ஒரு பாடம் படிப்பிக்கலாம் என்று எத்தனையோ குழந்தைக் கனவுகள் எல்லாம் கண்டு விட்டேன்.

அதற்கிடையில் என்னுடைய அண்ணன் உபாத்திமைத் தொழிலில் இருந்து ஏதோ ஒரு சோதனை பாஸ் பண்ணி ஓர் அதிகாரப் பதவிக்குப் போய்விட்டார்.

அன்றும் கர்ணகை மச்சாளிடம் ஓடினேன். அவள் அன்று அலுத்துப் போய் வந்த மாமாவுக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள். நான் அவளருகில் போய் அமர்ந்து கொண்டேன்.

"குடிடா மச்சான், தேத்தண்ணி?"

"மச்சாள், உமக்கு ஒரு புதினம் தெரியுமா?"

"அட குடிச்சுப் போட்டுக் கதையன். இன்னொரு ரஷ்யாக்காரன் சந்திர மண்டலத்திற்குப் போய் சேர்ந்திட்டானோ அல்லது.. அல்லது... என்ன இவ்வளவு அவதிப்படுகிறாய்! குடியடா தேத்தண்ணி யை!"

"மச்சாள் இந்தப் புதினம் கேள்விப்பட்டீரோ? தெரியாது போலக் கதைக்கிறீர். என்ரை அண்ணன் பெரிய சோதனை பாஸ்பண்ணிப் போட்டார். அவருக்கு இனிமேல் மாமாவைப் போல வாத்தி வேலை இல்லை. இனிப் பெரிய கவுண்மேந்து உத்தியோகம்!"

"என்னடா சொல்லுகிறாய், குரங்கா."

"இனிமேல் உம்மடை தேத் தண்ணி குடிக்கமாட்டேன். பெரியண்ணன் வந்து உம்மைக் கலியாணம் முடிச்சு எங்கடை வீட்டை கொண்டு வந்து அதன் பிறகு உம்மடை கையாலை ஒரு தேத்தண்ணி தந்தால் குடிப்பன். இப்ப அதெல்லாம் ஏலாது."

"போடா சனி, போடா குரங், போடா மூதே! இதிலே நிண்டியோ ஏப்பைக் காம்பாலை வாங்கப் போறாய் என்னட்டை!"

"என்ன மச்சாள் உமக்கு சந்தோஷமில்லையா?"

"போடா!"

அவளுடைய மென்மையான கன்னங்கள் மறுபடி திடீரென்று சிவந்தன. அவள் குங்குமம் அணிந்திரா விட்டாலும் பிறைமதியொத்த அந்த நெற்றி குங்குமம். போலச் சிவந்து விட்டது. அவள் உடனே எழுந்து என் மாமாவான தன் தந்தைக்குத் தேநீரும் பலகாரமும் கொண்டு சென்றாள்.

வெட்கம் என்னையும் பிய்த்துக் தின்றது. நான் ஓடி

விட்டேன்.
ஆனால் அந்த மணம் நடக்கவில்லை. என் தந்தைக்கு வாய் இல்லை. என் தாய்க்குப் பணமோகம். என் அண்ணாவுக்கு ஆங்கில மோகம். இரக்கமற்ற என் ஆறு அக்காமாருக்கும் அண்ணனுடைய பதவிக்கு ஏற்ற பெண் வேண்டும் என்ற ஒரு மூட எண்ணம். ஆங்கிலப் படிப்பு, பவிசு...
ஒரு நாள் என்னுடைய அப்பா என்னுடைய அம்மாவிடம் வாதாடினார். பேசினார் எல்லாம் முதன்முறையாகத் தான். நான் அறிந்த மட்டில்! அவர் அழுதார். என் குடும்பத்தவர் எல்லோருமாகச் சேர்ந்து அவர் வாயை அடக்கி விட்டனர். ஏழு பெண்கள் சேர்ந்து பேசும் பொழுது வயோதிபராகிய ஒரு ஆண் எம்மாத்திரம்?
அன்று நான் என் தந்தைக்காக இரங்கினேன். உடனே கர்ணகை மச்சாளிடம் ஓடினேன்.
அவள் அன்று குங்குமம் அணிந்திருந்தாள். தன் நீண்ட கூந்தலை வாரி முடிந்து அதிலே மணம் கமழும் மல்லிகையும் அணிந்திருந்தாள். அது ஒரு தனி அழகு. எட்டு வயதுச் சிறுவனாகிய எனக்குக் கூட அந்த அழகு புலப்பட்டது. நான் ஒரு கணம் பிரமித்து நின்று விட்டேன்.
யானைத் தந்தத்தால் படைக்கப்பட்ட பதுமைபோல அவள் வீட்டு வாசலிலே நின்றாள்; அந்த வீட்டை ஆளும் திருமகள் போல நின்றாள்.
ஏதோ கூறவென்று ஓடிப்போன நான் மலைத்து நின்று விட்டேன்.
அவள் அதிகாரமாகவே பேசினாள்.
"என்னடா!"
"ஒன்றுமில்லை மச்சாள்"
"என்ன என்னவோ கிளிச்சுக் கொட்டுகிறது போலை ஓடி வாறாய்! மாமி மச்சாள்மார் எல்லாரும் நல்லாயிருக்கினமோ!"
"ஓம் மச்சாள்"
"என்னடா என்னவோ செத்த வீட்டுக்குச் சொல்ல வந்தவன் போலை ஒருமாதிரிக் கதைக்கிறாய். பொறு மச்சான். இப்ப ஐயா வந்திடுவர். நீயும் அவரோடை இருந்து கொழுக்கட்டையும் வடையும் தின்னன்."
"ஓம் மச்சாள்"
ஆனால் நான் சொல்ல வந்ததை எப்படிச் சொல்லுவேன்? என் நா எழவில்லை. என் குழந்தை மனம் இடிந்து விட்டது.



"எனக்கு வீட்டிலை வேலை கிடக்குது மச்சாள்" என்று அழாக்குறையாகச் சொல்லி விட்டு எடுத்தேன் ஓட்டம்.
என்னுடைய அண்ணனுக்கு எங்கோ ஓரிடத்தில் கலியாணம் பேசி முடித்து வைத்துவிட்டாள் அம்மாள். என்னுடைய பிறவூர் மச்சாள் வந்தாள். என்னுடைய குழந்தை மனத்திற்கு அசிங்கத்தின் சின்னமாகவே அவள்தோன்றினாள். கன்னம் கரேலென்ற கொழுத்திருந்த முகத்திலே கறுத்தத் தோலை வெள்ளத் தோலாக்க முயலும் பவுடர் பூச்சு, கையிலே விலை உயர்ந்த ஒரு கைக்கடிகாரம், கழுத்திலே ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி, அதிலேதான் தாலியும் கோத்துக் கிடந்தது. பின்னி முடிந்த கூந்தலிலே வைத்துத் தொடுத்த முடிமயிர் புறம்பாகத் தெரிந்தது. அவளுடைய இடையிலே மெலிவோ மென்மையோ இல்லை. உடலிலே அழகில்லை. குரலிலே இனிமை இல்லை. மனத்திலே அன்பில்லை...
எனக்கு உடனே வீட்டைவிட்டு ஓடிவிட வேண்டும் போலத் தோன்றியது.
எங்கே ஓடுவேன் நான்?
என் கர்ணகை மச்சாளிடம் ஓடினேன். அவள் என்றும் போலச் சந்தோஷமாகவே இருந்தாள்.
யாரோ ஒரு தெய்வச் சிற்பி தன் வல்லமை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாக அடுக்கிவிட்ட முத்து வரிசையை வளைத்து மாணிக்கக்கரை கட்டிவிட்டது போன்ற இருந்தது அவள் புன்னகை.
எதற்கும் கலங்காத வீரத்தமிழ் மகள்போல் என்னைக் கண்டவுடன் அவள் கண்கள் சிரித்தன.
"வாடா மச்சான் இஞ்சை வந்து கொஞ்சம் கலியாண வீட்டுப் பலகாரம் சாப்பிடேன்!"
"என்ன மச்சாள். எனக்கெண்டே வச்சிருக்கிறீர் எங்கடை கலியாண வீட்டுப் பலகாரம் எல்லாம்..." என் குரல் தடைப்பட்டு விம்மி நின்றது.
எனக்கு அழுகை.
"அதிலை என்னடா மச்சான்? நீ எண்டாலும் என்னைக் கலியாணம் முடிக்க மாட்டியோ?"

**(மீதி அடுத்த இதழில்)**

**சிவஞான சுந்தரம் எனும் இயற் பெயர் கொண்ட இலங்கையர் கோன் எழுதிய சிறுகதை 'மச்சாள்'.**
**இலங்கையர்கோன் பற்றிய அறிமுகம் சென்ற இதழில் இடம் பெற்றிருந்தது. 'மச்சாள்' சிறுகதை ஈழத் தமிழர் வாழ்வின் ஒரு வெட்டு முகத்தைக் காட்டுகின்றது. இப்படி நிறைய 'மச்சாள்'களும் 'மற்றையவர்'களும் எமது வாழ்வில் அடிக்கடி வந்து போவர்.**
**நாற்பதுகளில் இலங்கையர் கோனினால் எழுதப்பட்ட இந்தச் சிறுகதை இந்த நாட்களிலும் அற்புதமாகப் பொருந்திப் போகிறது. அதனால் புலத்திலும் இடம் பெறுகின்றது.**

# நீங்கள் நலமாக...

**வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் அவர்கள் எழுதிய நீங்கள் நலமாக.. என்ற அனைவருக்கும் பயன்தரக்கூடிய வைத்திய நூலில் இருந்து.....**

## பசியில்லாத குழந்தை

**கேள்வி:** எனது இளையமகனுக்கு வயது இரண்டு. அவனுக்குப் பசியே எடுப்பதில்லை. எந்தச் சாப்பாட்டைக் கொடுத்தாலும் விருப்பமாகச் சாப்பிடுகிறான் இல்லை. சாப்பாட்டுடன் விளையாடிக் கொண்டிருப்பான். கண்டித்துச் சாப்பாடுகளை ஊட்டினாலும் மறுக்கிறான். சில வேளைகளில் சத்தியும் எடுப்பான். தன்னோடு ஒத்த வயதுள்ள பிள்ளைகளோடு ஒப்பிடும் போது இவன் எல்லாவற்றிலும் முன்னுக்குத்தான் நிற்பான் சாப்பாட்டைத் தவிர, பலவித டொனிக் மருந்துகள் கொடுத்துப் பார்த்தேன். அவற்றினால் அவனுக்குப்பசி எடுத்ததாகவும் (எடுக்க ஆலோசனை) தெரியவில்லை. உடம்பு கூடியதாகவும் தெரியவில்லை. இவனுக்கு நல்ல பசி எடுக்க ஆலோசனை கூறுங்கள்.

## வளர்ச்சிப் பதிவேட்டைப் பாருங்கள்.

**பதில்:**உங்கள் மகனுக்குப் பசி எடுப்பதில்லையெனக் கூறுகிறீர்கள். ஆனால் உடல், மன வளர்ச்சியில் மற்றப் பிள்ளைகளுக்குக் குறைந்தவனில்லை என்ற தொனியில் எழுதியிருந்தீர்கள். எதற்கும் அவனது எடையைப் பாருங்கள். குழந்தைக்குத் தடுப்பூசிகள் போடும்போது அதனைக் குறித்துத்தரும் குழந்தை வளர்ச்சிப் பதிவேடு உங்களிடம் இருக்கிறதல்லவா? அதில் உங்கள் மகனின் இப்போதைய வயதிற்கு நேரே தற்போதைய நிறையைக் குறித்துப் பார்த்தால் அவனது வளர்ச்சி போதுமானதா இல்லையா என்பதை அறிந்து கொள்ள முடியும். இதை அட்டவணையில் குறித்துப் பார்ப்பதில் ஏதாவது சந்தேகமிருந்தால் உங்கள் குழந்தை நல அல்லது குடும்ப வைத்தியரது உதவியைப் பெறுங்கள்.

சிலவேளைகளில் அவனது வயதுக் குழந்தைகளுடன் ஒப்பிடும்போது அவன் பார்வைக்குச் சிறியவனாகத் தோன்றலாம். இதற்குக் காரணங்கள் பலவாயிருக்கலாம். உதாரணமாக நீங்கள் அல்லது உங்கள் கணவர் உருவத்தில் சிறியவராக இருந்தால் அது உங்கள் குழந்தையிலும் எதிரொலிக்கும். எதற்கும் அவனது பிறப்பு நிறைக்கேற்ப அவன் வளர்ச்சியிருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. உடற் தேவைக்கேற்ப உண்பார்கள்.

இரண்டு வயதில் பிள்ளைகள் உணவைப் பற்றி அக்கறை எடுப்பதில்லை. விளையாடி விளையாடித் தான் சாப்பிடுவார்கள். உணவும் அவர்களுக்கு விளையாட்டப் பொருள் போலத் தான் தெரியும். விரைவாகவும் உண்ணமாட்டார்கள். நீண்ட நேரம் எடுக்கக் கூடும். உணவில் ஆர்வம் காட்டாமலும் இருக்கக் கூடும். ஆனால் தமது உடற் தொழிற்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் வேண்டியதை நிச்சயம் உண்பார்கள். வீணாகக் கவலைப்படாதீர்கள். நிர்ப்பந்திக்க வேண்டாம்.

சில பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே கூடிய பசி இருப்பதுண்டு. அதே போல சில பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே பசி குறைவாக இருக்கலாம். எனவே நீங்கள் அந்தரப்படுவதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. ஆனால் மக்கியமான விடயம் என்னவெனில் சாப்பிடும்படி அவனை நிர்ப்பந்திப்பதும் அதீதமாக முயற்சிப்பதும்தான் அவன் சாப்பிடாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

நீங்கள் எந்தளவிற்கு அதிகம் முயற்சிக்கிறீர்களோ, அவன் அதற்குமேல் வேண்டாமென அடம்பிடிக்கலாம். உணவு ஊட்டுவதற்கு நீங்கள் எடுக்கும் அக்கறையும், ஆர்வமும் அவனுக்கு விளையாட்டுப் போலத் தோன்றி அவனுக்குச் சந்தோசத்தைக்கொடுக்கும். முழு வீடுமே தனக்குப் பின்னால் திரண்டு நின்று தனக்கு உணவூட்ட முயலுவது அவனுக்கு மிகுந்த ஆனந்தத்தையும், திருப்தியையும் கொடுக்கும். உணவை மறுப்பான்.

## டொனிக்குகள் உதவுமா?

உங்களைப் போலவே பல தாய்மார்கள் தாங்கள் உணவூட்டுவதற்காக எல்லாவிதமான முயற்சியை எடுத்துப் பார்த்தும் சரிவரவில்லை என்பார்கள்.

ஆசை காட்டுவது, கதை சொல்லுவது, சாப்பிட்டால் அவனுக்கு விருப்பமான தின்பண்டங்களைக் கொடுப்பது, கண்டிப்பது, தண்டிப்பது என எல்லா முயற்சி எடுத்தாலும் அவன் சாப்பிடாமல் இருக்கக்கூடும். அதேபோல் விற்றமின் டொனிக்குகளும் கூட குழந்தையைச் சாப்பிட வைக்காது.

## உங்கள் முயற்சி

நீங்கள் எடுக்கும் ஒரே ஒரு நடவடிக்கை அவனைச் சாப்பிட வைக்கக்கூடும். எந்த வித முயற்சியும் எடுக்காமல் பேசாமல் விடுவதுதான் அது. உணவை அவனுக்குக் கொடுத்துவிட்டு தேவையென்றால் உண், இல்லாவிட்டால் விடு என்கிற பாவனையில் விட்டுப்பாருங்கள். சாப்பிட்டுவிட்டானா, இல்லையா எனப் பார்க்கும் துருவல் பார்வைகூட கூடாது. உணவை உண்ணாததற்காக அவனை ஏசவோ, தண்டிக்கவோ வேண்டாம். உண்டு முடித்ததற்காகப் பாராட்டவும் வேண்டாம். அவன் தானே வழிக்கு வருவான்.

## உணவின் அளவும் கவர்ச்சியும்

ஒரேயடியாக கோப்பையில் நிறைய உணவைப் போட்டு விடாதீர்கள். அளவாகப் போடுங்கள். தேவையென்றால் அவனாகக் கேட்கட்டும். முதல் நாளே அவன் சரியாகச் சாப்பிடுவான் என எண்ணாதீர்கள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு இந்த முறையைக் கடைப்பிடியுங்கள். சில தினங்களுக்குள் தானாகவே

சாப்பிட ஆரம்பிப்பான்.

அவனது கண்களுக்குக் கவர்ச்சியாக உணவுகளைக் கொடுங்கள். பல்வேறு நிறங்களில் அழகாக ஒழுங்குபடுத்திக் கொடுங்கள். ஆனால் அதற்காக அவனை ருசிகளுக்கு அடிமையாக விட்டுவிடாதீர்கள். நீங்கள் கொடுப்பதை அவன் வேண்டாமென்று சொன்னால் மறுப்புக்கூறாமல் உணவுக் கோப்பை யினை எடுத்து விடுங்கள்.

## நொறுக்குத் தீனி

அவனது சாப்பாட்டு முறைகள் பற்றியும், அவன் அதிகம் சாப்பிடாதது பற்றியும் அவன் காதுபட மற்றவர்களுடன் கதைக்காதீர்கள். முக்கியமான விடயம் என்னவெனில் சாப்பாடுகளுக்கு இடைப்பட்ட நேரத்தில் சிற்றுண்டிகளையும், நொறுக்குத் தீனிகளை யும் கொடுக்காதீர்கள். போதிய உணவை எடுக்கட்டும் என்ற ஆர்வத்தில் ஒரு நாளைக்கு 15 முதல் 20 தடவைகள் கூட சில தாய்மார் தமது குழந்தைகளுக்கு கொடுக்க முயல்வதுண்டு. நீங்களும் இத்தகைய தவறான முறைகளுக்குப் போக வேண்டாம். அத்துடன் பிள்ளையை எந்த நேரமும் தூக்கி வைத்துச் செல்லம் கொடுக்காதீர்கள். நன்றாக ஒடி விளையாட விடுங்கள். பசி எடுக்கும்.

உணவை உண்ணும்படி ஊக்கப்படுத்தாமல் விடுவதா லும் தெண்டிக்காமல் விடுவதாலும் எந்தப் பிள்ளையும் பட்டினிக்கு ஆளாவதில்லை என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள். ■

*கலாநிதி எம்.கே.முருகானந்தன்*

எம்.கே.முருகானந்தன் தற்பொழுது கொழும்பில் வசித்துவரும் ஈழத்தில் வியாபாரிமூலையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது வைத்திய சேவை மூலம் வடமராட்சி மக்களுக்கும், தனது எழுத்துக்கள், இலங்கை வானொலி மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் ஊடாக ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும் நன்கு பரிச்சய மானவர். தமிழில் அதிக நூல்கள் வெளிவராத மருத்துவத்துறையில் பாமர மக்களுக்கும் புரியக்கூடிய வகையில் பலநூல்களையும் எழுதியுள்ளார். இதுதவிர இலக்கியம், விமர்சனம், சிறுகதைகள் எனப் பல துறைகளிலும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர். தனது அறிவியல்துறை எழுத்துக்களுக்காக சாகித்திய மண்டலப் பரிசு, இலக்கியப்பரிசு ஆகியவற்றை பெற்றவர்.

## நுங்கு தெரியுமா?

உங்களுக்கு நுங்கு தெரியுமா,
நுங்கு?
பொழுது படும் வேளைகளில்
கரிய பனங் கூடல்களுக்குள்
ஓடித் திரிந்து பொறுக்கி
முகிள் உடைத்து
ஆச்சியிடம் கொடுத்து
சத்தகத்தால் அரிந்து
உறிஞ்சி உறிஞ்சி குடிப்போமே,
நுங்கு?

நுங்கு எனக்கு வேண்டும்
என் கிராமத்து நுங்கு
எனக்கு வேண்டும்
உங்களால் தர முடியுமா?

என் கிராமம் இப்போ
சிதைந்து விட்டது
என் குடிசை இப்போ
தகர்ந்து விட்டது

என் கிராமத்து நுங்கு
எனக்கு வேண்டும்

நான் தவழ்ந்தேன்
நடை பயின்றேன்
நிமிர்ந்தேன்
நின்றதெல்லாம் என் மண்

என் மண்
எனக்கு வேண்டும்

என் ஊரை
என் உறவுகளை
ஒற்றையடிப் பாதைகளை
கரிய பனங் கூடல்களை
உங்களால் தர முடியுமா?


என் கிராமத்து நுங்கு
எனக்கு வேண்டும்

தேன்மொழி விஜயராகவன்
குரும்பசிட்டி

# வெற்றி வாய்ப்பு யாருக்கு?

## சண்யோன்சன்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் இங்கிலாந்து



**உலகக்** கிண்ண உதைபந்தாட்டம் பிரான்ஸ் 98 முடிவடைந்து ஒரு வருடத்திற்குள் கிரிக்கெட் போட்டிகள் வந்துள்ளன.
உதைபந்தாட்டப் போட்டிகள் போல் கிரிக்கெட் பல நாடுகளில் பிரபல்யம் அடையாவிட்டாலும் அறிமுகமான நாடுகளில் உச்ச நிலையிலேயே உள்ளது.
மேற்கத்தைய நாடுகளில் EAT FOOTBALL, SLEEP FOOTBALL, , Drink Coke என்ற விளம்பரதாரர்
வழங்கும் உதை பந்தாட்ட போட்டிகள் போல் ஆசிய நாடுகளில் EAT CRICKET, SLEEP CRICKET, Drink Coke என விளம்பரதாரர் வழங்கும் கிரிக்கெட் போட்டிகள் உள்ள அளவுக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் அதிகம்.
எம்மவர்க்கு கிரிக்கெட் என்றால் உயிர். அந்த உயிர்க் கிரிக்கெட்டுக்கான உலகக் கிண்ணப் போட்டி இம்முறை இங்கிலாந்தில் நடைபெறுகின்றது.



மே 14 இல் ஆரம்பமாகும் இந்தப் போட்டிகளில் 12 நாடுகளின் அணிகள் கலந்து கொள்ளுகின்றன.
9 ரெஸ்ற் அந்தஸ்துப் பெற்ற நாடுகளுடன் மினி சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதி பெற்ற மேலும் மூன்று நாட்டு அணிகளான பங்களாதேஷ், கென்னியா, ஸ்கொட்லாந்து அணிகளும் கலந்து கொள்ளுகின்றன.

கலந்து கொள்ளும் அணிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் ஈடுபடுகின்றது.

| குழு A | குழு B |
|---|---|
| **இங்கிலாந்து** | **அவுஸ்திரேலியா** |
| **இந்தியா** | **பங்களாதேஷ்** |
| **கென்னியா** | **நியூஸிலாந்து** |
| **தென்னாபிரிக்கா** | **பாகிஸ்தான்** |
| **இலங்கை** | **ஸ்கொட்லாந்து** |
| **சிம்பாப்வே** | **மேற்கிந்தியத் தீவுகள்** |

ஒவ்வொரு அணியும் தமது குழுவிலுள்ள எல்லா அணிகளுடனும் ஒவ்வொரு போட்டியிலும் கலந்து கொள்ளும். மொத்தமாக முப்பது போட்டிகள் நடைபெற்று இரு குழுக்களிலிருந்தும் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று நிலையங்களைப் பெறும் அணிகள் இரண்டாம் நிலைப் போட்டிகளுக்குத் தகுதி பெறும்.
சுப்பர் சிக்ஸ் (Super six) எனப்படும் இரண்டாவது சுற்றில் ஒவ்வொரு அணியும் எதிர்க் குழுவிலுள்ள மூன்று அணிகளுடனும் ஒவ்வொரு போட்டியில் கலந்து கொள்ளும்.

ஆறு அணிகளும் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு முதல் நான்கு இடங்களையும் பெறும் அணிகள் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். முதல் இடம்பெறும் அணி நாலாவதான அணியுடனும் இரண்டாம் அணி மூன்றாம் அணியுடனும் அரை இறுதிப் போட்டியில் மோதும்.

வெற்றி பெறும் அணிகள் யூன் மாதம் 20ம் திகதி லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆரம்பப் போட்டியும் லோட்ஸ் மைதானத்திலேயே நடை பெறுகின்றது. மே 14ம் திகதி நடைபெறும் இந்தப் போட்டியில் போட்டியை நடாத்தும் நாடான இங்கிலாந்து அணியும் தற்போதைய உலகச் சம்பியனான இலங்கை அணியும் மோதுகின்றன.

போட்டிகள் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன.

### வெற்றி வாய்ப்பு யாருக்கு?

**ஸ்கொட்லாந்து பங்களாதேஷ் கென்னியா** அணிகள் வளர்ந்து வரும் அணிகள். அவற்றைப் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. எனினும் கென்னியா அணி நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது.

சிம்பாப்வே அணியை எடுத்தால் ஒருநாள் போட்டிகளில் பெரிதாக எதுவும் சாதிக்காத அணி. ஓரிரு வெற்றிகளைப் பெற்றாலும் குழு நிலையிலிருந்து வெளியில் வருவது மிகவும் கடினம்.
**நியூசிலாந்து** அணியில் கிண்ணத்தை வெல்லும் அளவுக்கு பலமான அணியாகக் கருத இடமில்லை.
மீதமிருக்கும் ஏழு அணிகளும் குறைத்து மதிப்பிட முடியாத அணிகள்.
**இங்கிலாந்து** அணியைப் பொறுத்தவரை அண்மைக் காலங்களில் பல தோல்விகளைச் சந்தித்த அணி. பல

திறமையான வீரர்களைக் கொண்டிருந்தும் அவர்கள் சரியாகப் பயன்படுத்தப்படாத நிலையில் திணறி வரும் அணி. அறிவிக்கப்பட்டுள்ள உலகக் கிண்ணத்துக்கான அணியில் அண்மைக் காலமாக சிறப்பாக ஆடிவந்த இருவரின் பெயர் இடம்பெறவில்லை. பின்னர் இடுப்பு வலி காரணமாக ஓரிடம் வெற்றிடமாக **நசீர் குசைன்** அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றவர் **மாக் ராம்பிரகாஷ்** பற்றிக் கதையே இல்லை. அறிவிக்கப்பட்ட வீரர்களிடையே 11 வீரர்களை தெரிவு செய்வதில் குழப்பமடையும் அணி. சொந்த மைதானங்களில் போட்டி நடைபெறுவது மிகப் பெரிய பலம்.



**மேற்கு இந்திய தீவுகள்** அணியும் ஓரிருவரை நம்பியுள்ள அணி. **பிறைன்லாரா, சிவ்நரின், சந்தப் போல், கால் கூப்பர்** போன்றவர்களை மட்டும் நம்பி ஆடிவரும் அணி.



**அவுஸ்திரேலியா** அணியும் மிகவும் சிறப்பாக ஆடிய அணி. ஆனால் கடைசி நேரத்தில் சிறிது தடுமாறுகிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆரம்பம் முதல் இறுதிவரை சிறந்த வீரர்களைக் கொண்ட அணி எனினும் அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் பல வீரர்களின் திறமைகள் வெளிப்படவில்லை. எனினும் இந்த அணியின் வீரர்களில் பலர் இங்கிலாந்து மைதானங்களில் ஆடிவருபவர்கள் என்பது கைகொடுக்கும் பலம் என்று எதிர் பார்க்கலாம்.

**இலங்கை** அணியை எடுத்தால் கடந்த வருடச் சம்பியன். அதிரடி வீரர், சுழல் பந்து வீச்சாளர் **முரளிதரன்** என்று பல சாதகமான விடயங்களைக் கொண்ட அணி. ஆனால் அண்மைக்காலமாக காயம் காரணமாக ஆடாத **ஜெயசூரிய, முரளிதரன்** போன்றோர் கடைசி நேரத்தில் கைகொடுப்பார்களா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏற்கெனவே முரளிதரனின் பந்து வீச்சை எறிவதாகக் குற்றம் சாட்டிவரும் அவுஸ்திரேலிய அணி ஏதும் பிரச்சனைகளைக் கிளப்புமா. அணித்தலைவர் **அர்ச்சுனா ரணதுங்கா** பல அணிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளவர். அதேவேளை திறமையாக அணியை வழிநடத்தக்கூடியவர். இலங்கை அணியின் மிகப் பெரிய பலமும் பலவீனமும் அதன் அணித்தலைவரே.



**இந்திய** அணியைப் பொறுத்தவரை திறமையான பல வீரர்கள் இருந்தாலும் **டென்டுல்கர்** என்ற தனி நபரைப் பெரிதும் நம்பும் அணி. டென்டுல்கர் அடித்தால் தொடர்ந்து எல்லோரும் சிறப்பாக ஆடுவர். இல்லையேல் அணி கொஞ்சம் தடுமாறத் தொடங்கும். அனைத்து வீரர்களும் தங்களில் நம்பிக்கை வைத்தால் எதுவும் சாதிக்கக் கூடிய அணி. இளம் வீரர் ரமேஷ் அவதானமாக ஆடுகிறார். ஆனால் புதியகளம், புதிய இடம், பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அணித்தலைவர் **அசாரும்** ஒரு அலட்டிக் கொள்ளாத அவதானமான வீரர்.

**பாகிஸ்தான்** அணி பல இளம் வீரர்களைக் கொண்ட அணி. சிறந்த அணி. வெற்றியை நோக்கிச் செல்லும்போது மிகவும் உற்சாகமாக ஒருவருக்கொருவர் தோல் கொடுத்து இணைந்து வெற்றிக் கனியைப் பறிக்கும் வெறி பெரிய பலம் எனினும் எதிரணியின் கை ஓங்கினால் சட்டென்று சோர்ந்து விடுவது இளம் வீரர்களின் அனுபவமற்ற தன்மையை அப்படியே காட்டும். அணித்தலைவர் **வோசிம் அக்கிரம்** ஒரு மிகப்பெரிய சாதகம். அத்துடன் வேகப் பந்து வீச்சாளர் **சோகிப் அக்தர்** 150 கிலோ மீற்றர் வேகத்தில் நேராக விக்கற்றை நோக்கி வீசும் பந்து தடுமாற வைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் ஆசிய அணிகளைப் பொறுத்தவரை தமது மைதானங்களிலேயே சாதனை நிகழ்த்துவர். சுழல் பந்து வீச்சாளர்களுக்கு பெரிதும் சாதகமான மைதான அமைப்பு. ஆனால் இங்கிலாந்தில் பொதுவாக வேகப்பந்து வீச்சாளருக்குரிய மைதான அமைப்புக்கள் உள்ளன.

இறுதியாக **தென்னாபிரிக்க** அணியை எடுத்தால் கிண்ணத்தைப்பெற பெரிதும் எதிர்பார்க்கப்படும் அணி. சிறந்த அணி. சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், சிறந்த பந்து வீச்சாளர்கள், சிறந்த பந்து தடுப்பாளர்கள் என்று அனைத்தையும் ஒருங்கே கொண்ட அணி. தற்போதைய அணித்தலைவர், **கான்கே குறேனியே** தலைமையில் ஆடிய ஒருநாள் போட்டிகளில் 95% க்கும் மேலான போட்டிகளில் வெற்றிபெற்ற சாதனை. ஆறு, ஏழு என்று விக்கற்றுக்கள் சரிந்தாலும் நிதானமாக வெற்றியை நோக்கிச் செல்லும் தன்மை என்பவை அணியின் சிறப்பம்சம். தென்னாபிரிக்க அணிக்கு அதிக வாய்ப்பு இருந்தாலும் ஆனைக்கும் அடி சறுக்கும் என்பர்.

மற்றைய அணிகளும் நலிந்த அணிகளல்லவே! ■

புலம் வாழ் எம் இனிய "புலம்" வாசக நேயர்களுக்கும்,
எம் உறவுகளுக்கும்
எம் இதயம் கனிந்த பிரமாதி புதுவருட வாழ்த்துக்கள்

# SAI MOTHER LAND

## * BROADWAY OFF LICENCE*

**140, BURNTOAK BROADWAY, BURNTOAK, EDGWARE, MIDDX, HA80BB, UNITED KINGDOM**

VIRUDSIGA
CASSETTES
MARK OF QUALITY

## *VIRUDSIGA AUDIO*

142, BURNTOAK BROADWAY, BURNTOAK, EDGWARE,
MIDDX, HA80BB, UNITED KINGDOM.
IN INDIA:

**12/1, DAWOOD SAHIB STREET
ANNA SALAI, CHENNAI 6000 002
TEL: 4430385, FAX 9410913
CONTACT MR.S.DEEN**

CONTACT: விவே (VIVE)
**TEL: 0181 905 7319
TEL: 0181 952 7920
FAX: 0181 931 0698
MOBILE: 0958 630 548
E.MAIL sai@pro-net.co.uk.**

# YARL CASH & CARRY


எத்தனை வண்ணங்கள் உலகினில்
அத்தனை வண்ணங்களும் ஓரிடத்தில் கிடைக்குமா?




எத்தனை பொருட்கள் உண்டோ
அத்தனை பொருட்களையும்
ஓரிடத்தில் பெற

Yarl Cash & Carry
Heim Str - 05
3422 ALCHEN FUUH KIRCH BERG
SWISS.

TEL: 034 44 59838
FAX: 034 44 59841
NATEL: 079 402 9243
079 448 7518


ஜேர்மன் பொன் (bonn) நகரில்
koblenzer Str - 83 ல் ஒரே குடையின் கீழ் அமைந்துள்ள
CEYLON TRADERS
CEYLON TRAVELS
Ceylon Travels
Koblenzer Str -83
உங்களுக்கு தேவையான மளிகைப் பொருட்கள், இலங்கை,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி வகைகள்,
கடலுணவுகள், தமிழ், சிங்களம்,
ஹிந்தி வீடியோ, CDக்கள் என்பனவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
அதை விட,
CEYLON TRAVELS ல்
உலகின் எல்லா
இடங்களுக்கும்
மலிவு
விலையில் பிரயாணச்
சீட்டுக்களை
பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பிரயாணங்களுக்கு
தொலை பேசி இலக்கம்:-
0228 /356317
தொலை நகல்:- 356307
தொலைபேசி இலக்கம்
0228 /366377



# SAI TRADER

சுவிஸ் மாநிலம் முழுவதும்
மொத்த வினியோகம் செய்வோர்

- ☐ உடன் மரக்கறி வகை ஏற்றுமதியாளர்
- ☐ விமான நிலைய ஏற்றுமதி, இறக்குமதி பொதிகள் கையாளும் சேவை
- ☐ பிற நாடுகளுக்கு பொதிகள் அனுப்பும்சேவை


நம்பிக்கை நாணயம்
இவற்றின் இன்னொரு பெயர்

## சாயி றேடர்


**SAI TRADER**
**Rasamavickam Imports & exports**
**Oberdeldstr 12C**
**CH 8302 Kloten (Zurich Airpoat)**
**Telephone: 01 881 45 50 01 881 45 54**
**Fascimall: 01 881 45 51 079 218 7075**

# ஆதங்கன்

**சுதந்திரத்தின்** பின்னர் தொடர்ச்சியாக பல வழிகளில் தமிழ் மக்கள் அடக்கு முறைகளுக்கு




உள்ளாகி வருகின்றனர். இந்த அடக்கு முறைகள் காலத்துக்கு காலம் உருவம் மாறின, தன்மை மாறின, அடக்கு முறையாளர்கள் மாறினார்கள். ஆனால், தமிழ் இனம் அடக்கப்படுவது மட்டும் மாறவில்லை. இது ஒரு தொடர் கதையானது. ஆனால் அடங்கியிருந்த தமிழ் இனம் விழித்துக் கொண்டது. தனக்கெதிரான அடக்கு முறைகள், உரிமை பறிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும்





என்று உணர்ந்து கொண்டது. அதற்கான வழிவகைகளை வகுத்துக் கொண்டது. காலத்துக்கு ஏற்றவாறு கனதி கொடுத்து தம் வழியில் தொடர்கின்றார்கள்.
இலங்கையில் சிறுபான்மை இனமாக இருக்கின்ற தமிழ் மக்களை அடக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.
தமிழர்களை விட வேறும் சிறுபான்மை இனங்கள் இருக்கின்ற போதும் ஏன் தமிழர்களை அடக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது என்பது இன்னமும் பலருக்கு கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. இந்த நிலை ஆராயப்பட வேண்டியதும், காரணம் காட்டப்பட வேண்டியதும் கட்டாயமானதாகும்.
இது தொடர்பாக பல கருத்துக்கள் அல்லது முரண்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். இவற்றுள் ஒரு காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் முன்னேற்றகரமான அம்சங்கள் ஆட்சியாளர்களுக்கு மனப் பீதியை ஏற்படுத்தியிருக்கக்கூடும். இந்த எண்ணமே தமிழர்களது முன்னேற்றத்தை தடுத்து அவர்களை அடக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கலாம்.





காய்த்த மரத்துக்கே கல்லெறி விழும் என்பது எமது மூதாதையர் சொன்ன மொழி. இதுவே இன்றைய தமிழ் மக்களின் நிலையும் கூட. திறமை முயற்சி என்பவற்றைக் கண்டு பொறாமைப்பட்டவர்கள் அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.
திறமை அடிப்படையில் முன்னேற முயற்சிக்கும் ஒரு இனத்தின் முன்னேற்றத்தை தடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஆட்சிக்கு அவ்வப்போது வரும் ஆட்சியாளர்கள் கவனமெடுத்தார்கள்.
தமிழர்கள் கல்வியே கண்ணென கொண்டு பயின்ற கல்வியில் கை வைத்தார்கள். பல்கலைக்கழக அனுமதியில் மாற்றங்களைக் கொண்டு வந்து பல்கலைக்கழக கல்வியில் கை வைத்தார்கள். இதனால் பல நூற்றுக் கணக்கான தமிழ் மாணவர்களது பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டது.
பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். வேலைக்கான நியமனங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்.
மொழி அடிப்படையில் சிங்களம் கட்டாயமாக்கப் பட்டு பல தமிழர்கள் வேலை வாய்ப்பு விடயத்தில் புறத்தொதுக்கப் பட்டார்கள்.
குடியேற்றத் திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு

## ஆண்டுகள் ஆகலாம். ஆட்சிகள் மாறலாம்
## ஆனால் அடக்குமுறை....?





தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டன.
தமிழ் மக்களுக்கான நிவாரண உதவிகளில் மற்றும் சமூக நலத் திட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இத்தகைய புறக் கணிப்புக்கள் எல்லாம் தமிழ் மக்களிற்கு எதிரான அடக்கு முறைகளின் மாற்று வடிவங்களாக அமைந்தன.
இவற்றால் தமிழ் மக்கள் பொருளாதார அடிப்படை யில் மட்டுமன்றி சமூக அடிப்படையில் மற்றும் உளவியல் அடிப்படையில் பாதிப்பிற்கு உள்ளானார்கள்.
இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவ்வப்போது நடைபெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் தமிழ் மக்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
தமிழர்கள் பொருளாதார ரீதியாகவேனும் அறிவியல்




ரீதியாகவேனும் அரசியல் ரீதியாகவேனும் வளர்ந்து விடக்கூடாது என்ற கொள்கையில் காலத்துக்குக் காலம் வந்த ஆட்சியாளர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள்.
எனினும் தமிழ் மக்கள் தரப்பில் இருந்த அரசியல் தலைவர்கள் உறுதியான கொள்கைகள் இன்றி அவ்வப்போது விலை போனார்கள்.

எனினும் உறுதி கொண்ட சில தலைமைகள் உரிமை பாதிப்பை, உரிமை பறிப்பை, அடக்கு முறையை உணர்ந்து கொண்டு விலை போகாமல் உரிமை பெற முயன்றனர். தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைகள் பல வழிகளில் பல வடிவங்களில் முன்வைக்கப்பட்டன. இத்தகைய கோரிக்கைகள் ஜனநாயக வழியில் முன்வைக்கப்பட்ட வேளையில் ஆட்சியாளர்கள் அவற்றை உதாசீனம் செய்தார்கள். இதனால் பொறுமை இழந்த இளைய தலைமைகள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர்.
இந்த நிலையில் கூட பிரச்னையின் அடிப்படையை உணர்ந்து தீர்க்க விரும்பாத ஆட்சியாளர்கள் யுத்தத்தை நடத்துவதோடு அடக்கு முறையையும் வன்முறையை யும் தொடர்ந்து வருகின்றனர்.
தொடரும் யுத்தம் பொது மக்களுக்கு பெரும்




அழிவையும் இன்னல்களையும் விளைவித்து வந்தாலும் ஆட்சியாளர்கள் அவற்றை கண்டும் காணாதவர்களாக தமிழ் மக்களின் அடக்குமுறைகளிலேயே கவனமாக இருந்து வருகின்றனர்.
சுதந்திரத்தையடுத்து ஆட்சிக்கு வந்த தலைமைகளால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் யுத்தமானது. அதனை தொடர்ந்து இந்த யுத்தம் ஜே.ஆரை அடுத்து வந்த ரணசிங்க பிரேமதாசாவினாலும் சில காலமாக தப்பித்தவறி பதவியில் இருந்த டிங்கிரி பண்டா விஜய துங்கவினால் அதன்பின் பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்காவினாலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. யுத்தத்தில் யுத்த தரப்புக்களில் யுத்த முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் மாறவில்லை. தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்போம் என்று பதவிக்கு வரும் ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்தபின் யுத்தம் ஒன்றே வழியென்று கூறி தமிழர்களை அடக்க முனைகின்றார்கள்.
ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். சுற்றி வளைப்புக்கள்,

தேடுதல்கள், சோதனைகள், விசாரணைகள் என்ற போர்வையில் துன்புறுத்தப்படுகின்றார்கள்.
தமிழ் மக்களது பூர்வீக பிரதேசங்கள் மீது இராணுவ அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன, விடப்படுகின்றன. பல நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்படுகின்றார்கள். பல கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இதைவிட




பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அகதிகளாய் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி சொல்லெணாத் துயரம் அடைகின்றார்கள்.
தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை பறித்துவரும் ஆட்சிக்கு வரும் அரசுகள் தங்களது அடாவடித் தனங்களை தொடர்கின்றது. இந்த அடாவடித் தனத்தைக் கண்டும் காணாதது போல் சர்வதேச சமூகம் கண் மூடி மௌனியாக இருக்கின்றது அவ்வப்போது அரசின் அடாவடித்தனங்களுக்கு உதவியும் புரிகின்றன.
ஆட்சிக்கு வருவதற்கு முனையும் எவரும் சமாதானம் என்ற சொல்லை உச்சரிக்க தவறவில்லை. சமாதானம் பேசி வாக்குப் பெற்று வென்ற ஆட்சியாளர்கள் அதிகாரம் கைக்கு வந்ததும் தங்கள் அடாவடித்தனத்தை ஆரம்பிக்கின்றார்கள். அடுத்த தேர்தல் வரை தொடர்கின்றார்கள். இது எமது நாட்டில் எமது வரலாறு காட்டிய உண்மை.
அம்மையார் ஆட்சிக்கு வருவதற்கு வெண்புறாவை கையில் ஏந்தி புத்தபிரானின் போதனை மொழிபேசி வந்தவர் பதவி கிடைத்ததும் யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். யுத்த வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட எண்ணம் கொண்டிருந்தார். அந்த எண்ணம் சரிவராது என்று அறிந்து கொண்ட அம்மணி நாட்டை யுத்த சூழ்நிலையில் அவசரகால பிரகடன சூழலில் வைத்தபடியே தேர்தலை நடத்தி மீண்டும் தன் கதிரையைப் பலப்படுத்த முனைகின்றார்கள். கதிரைக்கு காவல் காப்பதிலேயே கவனமாக இருக்கம் ஆட்சியாளர்கள் தமிழர்களது வாக்குகளையும் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களது வாக்குகளையும் பெற்றுவிட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டே சமாதானம் என்ற ஆசை வார்த்தையை அவ்வப்போது பேசுகின்றனர். ஆனால் உண்மைச் சமாதானத்தை எண்ணிப் பார்ப்பது கிடையாது. காலங்கள் ஓடுகின்றன. கதிரைகள் கை மாறுகின்றன. ஆனால் தமிழ் மக்களின் கவலைகள் மட்டும் மாறவில்லை. அவற்றை மாற்றவும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குறுகிய எண்ணம் கொண்ட ஆட்சியாளர்கள் விரும்ப மாட்டார்கள். இந்த நிலையில் தமிழ் மக்களின் நிலை என்ன? நிலைப்பாடு என்ன? நிர்ணயிப்பது யார்? நிர்ணயம் எப்போது?
ஆண்டுகள் ஆகலாம் ஆட்சிகள் மாறலாம் ஆனால் அடக்குமுறை எப்போது மாறும் இவற்றுக்கெல்லாம் விடை காண வேண்டியவர்களும் தமிழர்களே.

■

## புது வெள்ளை மணல் எழுத்து பூக்காரி

கோட்டுச் சூட்டுப்போட்டு டை கட்டிய
மாப்பிள்ளையாய்
20 பேயுள்ள மரநரம்பின் உள்ளேறி
சரி பாதி பழுத்த கொய்யாவை
சாப்பிடும்
மன அணில் எனது

சுத்த கொய்யாப் பழச்சிகப்பியவள் ஈருதடும்
புழுத்திண்ட பல்நுனியில் அண்டிநிற்கும்
சுருக்கெழுத்துப் புதுநகையும் கடித்த
திருப்தி வேறு வெறி

மூக்குமேல் விரிந்த பூ வொன்றில்
உட்கார்ந்து
அச்சப்படுத்தும் பார்வையாய்
துடிப்புக் காட்டும்

பன்னிறப் பூச்சிகளின் கண்ணெழுத்து
அவள் எனக்கு தந்த "ஓட்டோகிராஃப்"
என் ஆசை எழுதி, எழுதி
தீர்ந்து போன
வெள்ளை மணல் எழுத்து
உயிருள்ள, சில நாட்களில்
அணில் விருப்பம் எனக்கும்

உன் பார்வை பரந்த உலகினின்றும்
ஒரு சின்ன தூசாய் வெளியேற்ற மனமற்ற
காதல் நீர் பாய்ச்சு!

வெள்ளை மணல் எழுத்து பூக்காரியே...
என் காலில் மரமொன்று
முளைத்து நிற்கும் காலம் வரும்,
நீ யிருக்க..

முழுமதி எம்.முர்தளா

# அமெரிக்காவின் அட்டகாசம்

## மகேன்

**பிரச்சினைக்குரிய** கொசவோப் பகுதியானது தனது இரண்டு மில்லியன் சனத்தொகையில் 90% அல்பானியர்களைக் கொண்டுள்ளது. ஆயினும் இவர்களை ஆளும் யூகோசிலாவியச் சேர்பியர்கள் கொசவோப் பகுதியானது தமது பண்டைய கலாசாரத்தினதும், வைதீக அமைப்புக்களினதும் பிறப்பிடம் என வலியுறுத்தி வருகின்றனர்.

யூகோசிலாவியா குடியரசின் அமைவைச் சற்றுப் பார்ப்போமானால் இது 90களின் ஆரம்பம்வரை சிலோவேனியா, குறோசியா, பொஸ்னியா, மசடோனியா, என்பவற்றையும் தனது அங்கமாகக் கொண்டிருந்தது. ஏற்கனவே இடம்பெற்ற பிரிவுகளின் பின் சேர்பியப் பிரதேசத்தின் மொன்ரனே கிறோவையும் கொசவோப் பிரதேசத்தையும் மட்டுமே கொண்டிருக்கிறது. இந்நிலையிலேயே கலாசாரப் பின்னணி உடையதெனக் கருதப்படும் கொசவோவை இழப்பதென்பது யூகோசிலாவியத் தலைவர் மிலோசவிக்கின் அரசியல் எதிர் காலத்தையே கேள்விக்குரியதாக்கிவிடக் கூடிய வண்ணம் விஸ்வ ரூபம் எடுத்துள்ளது.

ஆளுமைமிக்க தலைவராகக் கருதப்பட்ட மார்சல் டிற்றோவின் கொமியுனிச தலைமையின் கீழ் சிறுபான்மை இனங்களும் மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை அனுபவித்து வந்தன. அதையும் மீறி கிளர்ந்த பிரச்சினைகள் அவரின் இரும்புப் பிடிக்குள் வைக்கப்பட்டன. அவரது மறைவுடன் ஏற்பட்ட வல்லமை மிக்க தலைமைக்கான வெற்றிடமும் சோவியத்தின் வீழ்ச்சியும் யூகோசிலாவியாவின் பிரச்சினைகள் கூர்மையடைந்து பிளவுகள் ஏற்பட காரணமாக அமைந்தன. இச்சந்தர்ப்பத்தில் கொமியுனிசக் கொள்கையிலிருந்து விலகி தேசிய வாதத்திற்கு உருவேற்றி தன் அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள மிலோசவிக் கையாண்ட தந்திரங்களும் கொசவோ பிரச்சினை கூர்மையடைய காரணமாகிற்று.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல்கன் தீபகற்ப



நாடுகளின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட போது இம்மக்களில் கணிசமான தொகையினர் தற்போதைய அல்பானியாவாக விளங்கும் நிலப்பரப்புக்கு வெளியே பரந்திருந்தனர். யூகோசிலாவியாவில் தொழில் வாய்ப்புக்கள் குறைந்த பின்தங்கிய தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாகக் காணப்பட்ட கொசவோப் பகுதியை விட்டு சேர்பியர்கள் குடிபெயர, அல்பானியர் தமது உறவுகளுடன் சேர்ந்து கொள்ள அப்பகுதிக்கு நகரத் தொடங்கினர். அத்துடன் இவர்களின் அதிகூடிய பிறப்பு விகிதமும் சேர்ந்து கொசவோ பகுதியில் அல்பானியர் பெரும்பான்மையினராக மாற வழி வகுத்தது.

கொமியுனிச ஆட்சியில் ஓரளவு உரிமைகளை அனுபவித்து வந்த கொசவோ அல்பானியர் 1989ல் இருந்து மிலோசவிக்கின் தேசிய வாதக் கொள்கை களினால் ஒடுக்கப்படத் தொடங்கினர்.

கொசவோப் பிரதேசத்தில் பெரும்பான்மையினராக உள்ள அல்பானிய மக்களை அப்பகுதியில் மிகக் குறைந்தளவில் வாழும் சேர்பியர்கள் இராணுவ பலம் கொண்டு அடக்கியாள முற்பட்டனர். சேர்பியக் காவல் துறையினரின் தீவிர கண்காணிப்பின் கீழ் அல்பானிய மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்தனர். மொழியுரிமை மறுக்கப்பட்டு, தாய்மொழிக் கல்விக்கு இடையூறு, மருத்துவம், சமூக நலம் போன்ற பல துறைகளிலும் திட்டமிட்ட புறக்கணிப்பு போன்ற பல பாதிப்புக்களுக்கு உட்பட்டனர்.

இந்நிலையிலேயே இவர்கள் தாமே தமக்குரிய கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கான அமைப்புக் களை உருவாக்கி, தமது பாரம்பரிய பிரதேசத்தை கொசவோ குடியரசென பிரகடனப்படுத்தி தங்கள் தலைவராக இப்ராகிம் ரூகோவா என்பவரையும் ஏற்றுக் கொண்டனர். 1995ல் பொஸ்னியா யூகோசிலாவியாவி லிருந்து பிரிந்து செல்லும் நேரத்திலும் ரூகோவாவின் அமைதி வழிப் போராட்டங்கள், தகுந்த பலன் தராததால் இவரின் தலைமையில் நம்பிக்கை இழந்த மக்கள் கெரில்லாப் போராட்ட அமைப்பை உருவாக்கி வளர்த்தனர். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் மிலோசவிக் இப்போராளிகளுக்கு எதிரான பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார். இதில் பெருமளவு பொதுமக்களும் குழந்தைகளும் இறந்தனர். இவ்விராணுவ நடவடிக்கை போராளிகளுக்கு உடனடியாகச் சிறு பின்னடைவைக் கொடுத்த போதும் அமைப்பில் பெருமளவு மக்கள் இணைய வழிவகுத்தது.

இந்நிகழ்வுகளின் பின்னணியிலேயே பிரச்சினைக்குரிய இருபகுதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டு நேட்டோவின் நேரடித் தலையீடு இடம்பெற்றுள்ளது. இத்தலையீட்டுக்கான காரணங்களில் ஒன்றாக ஐரோப்பாவின் சமநிலைக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடிய கொசவோ பிரச்னையானது அதன் எல்லைகளைத் தாண்டி விரிவடையவும், அண்டை நாடுகளான கிரேக்கம், துருக்கி என்பனவும் இதில் சிக்கும் அபாயமுள்ளது என்பதும் குறிப்பிட வேண்டியது. ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் உணவிற்கான பண்ணை விலங்குகளில் வியாபாரத்தில் ஏற்பட்ட பிணக்கில் மூண்ட 'பன்றி யுத்தம்' முதலாவது, இரண்டாவது பல்கன்யுத்தம், முதலாவது உலகப் போர்

உண்டாகக் காரணமாக இருந்தது என இந்நூற்றாண்டில் அவர்களிடையேயான பல பெரும் போர்களுக்கும் மூலகாரணமாய் இருந்தது இப்பல்கன் பிரதேசமாகும். மீண்டும் இப்பிரதேசம் தம்மிடையே ஒரு பெரும் போர் மீள வழி சமைத்திடுமோ என்ற அச்சமும் நேட்டோவின் தலையீட்டுக்கு ஒரு காரணமாகும்.

மறுபுறத்தில் தம்மிடையேயுள்ள வளங்களை பகிர்ந்து கொண்டு நலிவடைந்துவரும் தங்கள் தொழில் வளர்ச்சியை தூக்கி நிறுத்தியும் அமெரிக்க நாணயத்துக் குப் போட்டியாக ஒன்றிணைந்த ஐரோப்பாவின் பொது நாணயத்தினை அறிமுகப்படுத்தி வீழ்ச்சியுறும் வெளி நாட்டு வர்த்தக சந்தைகளை மீண்டும் கைப்பற்றியும் உச்ச கட்டப் பலன்களைப் பெறுவதற்காக பாடுபடும் இந்நேரத்தில் தமக்குப் பலவீனம் தரும் இப்பிரச்சினை நீண்டு கொண்டு இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அத்துடன் ஏற்கனவே பெருகிவிட்ட அகதிகள் வரவால் விழிபிதுங்கி நிற்கும் ஐரோப்பிய சமூகம் கொசவோப் போரினால் இவ்வெண்ணிக்கை கட்டுக்கடங்காமல் பெருகுவதையும் விரும்பவில்லை. இவையும் ஐரோப்பிய நாடுகள் நேட்டோவின் தலைமையில் இப்பிரச்சினையை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான காரணங்களாகும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் "ஐரோப்பிய ஒன்றிணைவு போன்ற சாதனைகளை நீங்கள் நடத்தினாலும் கூட உங்கள் உள்வீட்டுப் பிணக்கைத் தீர்க்க நான்தான் தலைமை தாங்க வேண்டும்" என்பதை அவர்களுக்குச் சுட்டிக் காட்ட நல்லதொரு சந்தர்ப்பமாக இது அமைந்து விட்டது. ஏற்கனவே ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்து தனது படைகளை பெருமளவில் திருப்பியழைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அமெரிக்கா ஆளாகி இருந்தது. அத்துடன் அது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய அசாதாரண நிலைமைகளை தனது படைகளை மீண்டும் வேறொரு விதத்தில் இந்த வட்டகையில் பெருமளவில் வைத்திருக்கவும், ஐரோப்பாவில் தனது செல்வாக்கை தொடர்ந்தும் நிலை நிறுத்திக் கொள்ளவும் பயன்படுத்திக் கொண்டது. அத்துடன் அடிக்கடி ஈராக் மீது தொடுக்கும் தனது தாக்குதலுக்கு உலக அரங்கில் தோன்றிவரும் எதிர்ப்புகளை திசை திருப்பவும், பாலியல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகி அமெரிக்க மக்களிடையே இழந்துவிட்ட தனது செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்தவும் அமெரிக்க அதிபர் கிளின்டனுக்கு நேட்டோவின் தலையீடு நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இங்கு கொசவோ மக்களின் உரிமைப் போராட்டத்தில் நியாயமான தன்மை அமெரிக்காவின் தலையீட்டுக் கான காரணமாக அமையவில்லை என்பதை அவர் களது நடவடிக்கைகள் பலவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

தனிநாடாகப் பிரிந்து செல்வது என்பதில் பிடிவாதமாக இருந்த கொசவோ போராளிகளை, நேட்டோவின் நேரடித் தலையீட்டுக்கு முன் தோல்வியில் முடிவடைந்த பேச்சுவார்த்தைகளில் தாங்கள் வரைந்த தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், பயங்கர வாத அமைப்பாக பிரகடனப்படுத்துவோம் என அமெரிக்கா மிரட்டிச் சம்மதிக்க வைத்ததை இங்கு நினைவு கூரலாம். உலகின்




பல பாகங்களிலும் நடைபெறும் பிரச்சினைகளிலும் அமெரிக்கா நியாயமான முறையில் தலையிடுமென சொல்லிக் கொள்கிறது. ஆயினும் இன்றைய கொசவோவில் இடம் பெற்றதைவிட மிகப் பெருமளவு மக்களை பலிகொண்ட ருவண்டா பிரச்சினையில் அது தலையிடாததிற்கு ருவண்டாவில் அமெரிக்க நலன்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தவிர வேறெந்தக் காரணமும் இருப்பதாகத் தெரிய வில்லை.

இன்று கொசவோவில் தனது தலையீட்டை நியாயப்படுத்த இதையொத்த போராட்டங்களான தமிழீழ, கிழக்குத் தீமோர் பிரச்சினைகளை தாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தகுந்த சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறிக் கொள்வது வெறும் கண்துடைப்பேயாகும். இது இதய சுத்தியுடன் கூறப்பட்டதாயின் இன்றுவரை இலங்கை அரசுக்கு வழங்கிவரும் இராணுவப் பயிற்சிகள், இராணுவ ஆலோசனைகள், ஆயுத உதவிகள் இவற்றுக்கு என்ன நியாயமான காரணம் கூறுவார்களோ தெரியவில்லை. இவையெல்லாம் இன்றைய உலக அரசியல் நடைமுறையில் மேற்குலக நாடுகள் எதுவும் நமது நலன்களுக்கு அப்பாற்பட்டு எந்தவொரு உரிமைப் போராட்டத்திற்கும் உதவி செய்யப் போவதில்லை என்பதையே விளக்கி நிற்கின்றன.

இவ்வுண்மைகள் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புக்கள் தமது போராட்டத்திற்குச் சாதகமான அரசியல் சூழ்நிலைகளை உலக அரங்கில் ஏற்படுத்துவதிலும், சரியான ஒரு தீர்வு ஏற்படுவதற்கு ஆதரவாக மேற்குலக நாடுகள் செயல்படுவதற்கு உரிய அழுத்தங்களைக் கொடுப்பதிலும் ஈட்டும் வெற்றியே அவர்களது போராட்டத்தின் வெற்றிக்கு முக்கிய பக்க பலமாக நிற்கும் என்பதை உணர்த்துகிறது.

மேற்குலக நாடுகளுக்கு குடிபெயர்ந்திருக்கும் நாம் எமது போராட்டத்திற்கு வலுச் சேர்க்க இந்நாடுகளுக்கு கொடுக்க வேண்டிய அரசியல் ரீதியான அழுத்தங்கள் தேவைகளையே இவை எமக்கு வலியுறுத்துகின்றன. ■

## (ஆசனம் யாருக்கு தொடர்ச்சி)




சுரண்டிய ஜெயலலிதா இந்தியாவையே விற்றுவிடக் கூடிய அரசியல் பேராசையால் பேரம் பேசினார்.

தமிழகத்தில் மத ஜாதிய நிலைப்பாடுகளில் பகுத்தறிவு சார்ந்த ஆக்க நிலைப்பாடு கொண்டிருந்தவர்கள் திராவிட இயக்கத்தினர். பெரியார் பிறந்த அதே தமிழகத்தில் தான் மத வாத அரசியல் கட்சியான பிஜேபி பாராளுமன்ற ஆசனங்களைப் பெற முடிந்தது. வகுப்புவாதமே இந்திய அரசியலானது. தமிழக அரசியலிலும் வகுப்புவாதம் வரும் ஆபத்து தோன்றியுள்ளது. பாரதிய ஜனதா ஆட்சியைத் தக்க வைக்கும் பொருட்டு இந்துத்துவாவுடன் சமரசம் செய்து கொண்டிருப்பதைப் போலவே திமுகவுக்கும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வகுப்பு வாதத்துடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலைப்பாடு வந்தது. கொள்கைகளை விடவும் கருணாநிதி, ஜெயலலிதா எனும் தனிநபர் பிரச்சினையே பூதாகரமாக அரசியல் அணிகளால் விஸ்வரூபம் எடுத்தன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினரும் மதச் சார்பற்ற, வகுப்பு வாதத்திற்கு எதிரான ஒன்றுபட்ட இந்தியாவை கோருபவர்கள். அதேவேளை மொழியே கலாசார மானது எனும் மாநில உணர்வுகளை மிகத் தாமதமாக புரிந்து கொண்டிருப்பவர்கள். இந்திய ஒருமைப் பாட்டிற்கும் மாநில இறையாண்மைக்குமான இணக்கம் காணவேண்டிய தர்க்க பூர்வமான உறவை அவர்கள் தற்போது சிந்திக்கிறார்கள். அவர்களால் காங்கிரசிற்கு மாற்றாகவோ பிஜேபிக்கு மாற்றாகவோ ஒரு மூன்றாம் அணியை கட்ட முடியவில்லை. வங்க, கேரள, மாநிலக் கட்சிகளாகவும் சிற்சில இடங்களில் ஸ்தாபன மயப்படுத்தப்பட்டும் இருக்கிறார்கள். இந்தியாவின் பிரதான முரண்டாபான ஜாதிய முரண்பாடு பற்றி அக்கறை கொள்ளாததால் அவர்கள் விலகியே நிற்கிறார்கள். மதம், வகுப்பு வாதம் போன்றவை குறித்து தெளிவான நிலைப்பாடு எடுக்க முயன்ற அவர்களால் பிராமணியம், இன ரீதியிலான ஒருமைப்பாடு போன்றவை குறித்து வரலாற்று ரீதியிலான புரிந்து கொள்ளலுக்கு வரமுடியவில்லை. வர்க்க முரண்பாட்டுக்கு அப்பாலும் நிலவும் பால் முரண், இன முரண், ஜாதிய முரண் போன்றவை குறித்து இவர்கள் அதிகம் அக்கறைப்படவில்லை.

ஜெயலலிதா போலவே ஊழல் அரசியலும் சந்தர்ப்ப வாத அரசியலும் பதவி அரசியலுமே காங்கிரஸ் கட்சியினது அரசியலாகியது. தனிநபர் தியாகம், தூய்மையான நிர்வாகம் போன்ற காமராஜர் அவர்களின் பண்புகள் கூட காங்கிரசிடம் அற்றுப் போய் விட்டது. நடிகர்களை வைத்து அரசியல் செய்யுமளவு தரம் தாழ்ந்தனர். ஆட்சியின் பலத்தைப் பொறுத்து மத வாதிகளாகவும் மாறுவர் காங்கிரஸ் கட்சியினர். அயோத்தி மசூதி, இடிப்பும் ஆயிரக் கணக்கில் முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டதும் காங்கிரஸ் ஆட்சியில்தான் என்பது கவனத்திற்குரியது.

ஜெயலலிதா என்கின்ற தனிநபருக்கு அடி பணிந்து போகாததால் இப்போது பிஜேபி யின் ஆட்சி கவிழ்ந்திருக்கிறது. இன்னும் சில மாதங்களில் தேர்தல் வரப்போகிறது. மிகப் பெரிய அரசியல் பொருளியல் அனர்த்தம் இது. இந்தியாவின் எதிர்காலம் என்பது மதச் சார்பற்ற அரசுகளில்தான் தங்கியிருக்கிறது. மாநில இறையாண்மைகளை அங்கீகரித்த, தலித் மக்களின் உரிமைகளை அங்கீகரித்த அரசியலில்தான் தங்கியிருக்கின்றது. இடதுசாரிகள் கடந்த காலத்தில் விட்ட தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டால் மட்டுமே எதிர்காலம் உண்டு. ஜெயலலிதா ஒரு ஆபத்தான மக்களைச் சுரண்டும் ஏமாற்று அரசியல்வாதி என்பது கண்கூடு. காங்கிரஸ் காட்சிக் கொள்கைகள், அதனது மரபு நேரு இறந்த காலத்தோடு போயிற்று. இப்போது பதவி வெறி கொண்ட கூட்டம் மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தமது சந்தர்ப்பவாத அரசியலுக்காகவே இந்திய, தமிழக அரசியல் கட்சிகள் பயன்படுத்தின, பயன்படுத்து



கின்றன. ஈழப் பிரச்சினையை இந்திய அரசியலின் சார்புப் பிரச்சினையாகவே இந்திய அரசியல் வாதிகள் நோக்குகின்றனர். ஈழத்தின் இறையாண்மை என்பது தவிர்க்க முடியாது வளர்ந்து நிற்கும் ஒரு வரலாற்றுக் கட்டாயம் என்பதைக்காண இவர்கள் மறுக்கின்றனர். இந்திய அரசியல் வாதிகளின் நிலைப்பாடுகளைச் சாராது சுயாதீனமான அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்வது மட்டுமே ஈழ அரசியலுக்கான துரதர்சனமாக இருக்கும். வரப்போகும் தேர்தல் முடிவுகள் மதச்சார்பற்ற ஒன்றுபட்ட இந்தியாவையும் ஈழப் பிரச்சினையின் இறையாண்மைக் கோட்பாட்டை யும் இணக்கமாகக் காணும் ஒன்றாக இருக்குமா என்பதே கேள்வி.

# ஈழத்து மெல்லிசையின் கர்த்தா
# தமிழ் ஒலிபரப்புக் கலையின் முன்னோடி
# எஸ்.கே.பரா கலையுலகின் பேரிழப்பு

ஈழத்துப் பாடல்கள் என்றதும் வானொலியை நிறுத்தி விடும் நேயர்கள், வேறு வானொலி நிலைய நிகழ்ச்சிகளைத் தேடும் நேயர்கள் என சினிமா மோகம் கொண்டிருந்த இலங்கை வானொலி நேயர்களிடம் ஒரு நேர்த்தியான மெல்லிசை ரசனையை வளர்ப்பதற்கு வழி திறந்தவர், வானொலியாளர் எஸ்.கே பரராஜசிங்கம் அவர்கள்.

ஈழத்து மெல்லிசையின் கர்த்தா, தமிழ் ஒலிபரப்பு கலையின் முன்னோடியான பரா அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். இசையில் ஆழமான புலமை அவருக்கு இருந்தது. கர்நாடக சங்கீதம் கற்றவர் என்ற சங்கீத வித்தகத் தலைக்கனச் செருக்கு அவரிடமில்லை. மண்ணின் பெயர் சொல்லும் இசைப் படைப்புக்களை வானொலி ஊடாக வளர்த்த பெருமை பரா அவர்களுக்கு உண்டு.



ஆசிரியர் பணியிலிருந்து அறிவிப்பாளர் பணிக்கு இலங்கை வானொலிக்குள் பிரவேசித்த பரா அவர்கள் அங்கே பல யுத்திகளைக் கையாண்டு வானொலியில் செயற்கரிய புதுமைகளை நிகழ்த்தினார். பல அறிவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் பணியும் அவரிடமிருந்தது அவர் பயிற்றுவித்த அறிவிப்பாளர்களில் ஒருவர்தான் இன்று உலகெங்கும் தன் குரலால் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் நிலையான இடம் பெற்றுவிட்ட அன்பு அறிவிப்பாளர் **பீ.எச்.அப்துல் ஹமீட்** அவர்கள்.

எட்டுமணி நேர வேலை, ஊதியம், வீடு, ஓய்வு, என்று சராசரி வாழ்க்கைக்குள் தன்னைக் கட்டிப் போடாமல் இலங்கை வானொலி ஒலிப்பதிவுக் கூடத்துக்குள் மணிக் கணக்காக இசைக் கலைஞர்களுடன் இருந்து உயிர்ப்பான கலைப் படைப்புக்களை உருவாக்கினார். ஈழத்து மெல்லிசை வரலாறு இன்றென்ன, என்றென்றும் அவர் பெயர் கூறும்.

ஈழத்தின் முதல் மெல்லிசைத் திரட்டான **கங்கையாளே** என்ற ஒலி வடிவத்தை உருவாக்கிய பெருமையும் பரா அவர்களுக்கே உண்டு.

வானொலியை விளம்பர சாதனமாக மட்டும் கருதாமல் விசய சாதனமாகவும் கையாண்டவர் பரா. பரா குரலால் சிறப்படைந்த நிகழ்ச்சிகள் பல. அவற்றுள் பாமாலை, ஈழத்துப் பாடல்கள், இசைச் சித்திரம், இதயரஞ்சினி என்பவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை.

தமிழ் ஒலிபரப்புக் கலையின் முன்னோடியான எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்கள் மெல்லிசையில் ஆர்வம் செலுத்தி பாடிய பாடல்களில் எம்.ஏ.குலசீலநாதன் அவர்களுடன் இணைந்து பாடிய சந்தன மேடை, மற்றும் மணிக்குரல் ஒலித்தது, குளிரும் நிலவினிலே, கங்கையாளே, (கோகிலா சிவராஜாவுடன்) உழைக்கும் கரங்கள், அழகான ஒரு சோடி கண்கள், நெஞ்சினில் ஊறும் (கோகிலா சிவராஜாவுடன்) ஆகிய பாடல்கள் என்றென்றும் இசைப் பிரியர்கள் நெஞ்சத்தை விட்டு நீங்காதவை.

பரா அவர்கள் 1999 மார்ச் 28ல் கொழும்பிலுள்ள வைத்திய மனையொன்றில் காலமானார் என்று அறிந்ததுமே உலகெங்கும் தமிழ் வானொலி நிலையங்கள் அன்னாருக்கு அஞ்சலி ஒலி மலர்களைச் சொரிந்தன. ஐ.பி.சியும் அஞ்சலித்தது.

ஈடுபடும் ஒவ்வொரு துறையிலும் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் பழக்கத்தை இறுதிவரை பரா கடைப்பிடித்து வந்திருக்கின்றார். கர்நாடக சங்கீத இசையென்றால் என்ன, மெல்லிசை என்றால் என்ன எதிலும் பிழை நிகழுமிடத்து அதனை திருத்தி செம்மையாக அந்த இசை வடிவம் அமைய நம்கலைஞர்களுக்கு உதவியாக வழிகாட்டியாக விளங்கினார் அமரர் பரா.

பரா அவர்கள் இலங்கை வானொலியில் தனது பணிக்காலம் முடிந்த பின்னர் வானொலி நிலையத்திற்கு வெளியே இருந்தும் தனது கலைப் பங்களிப்பை வழங்கியிருக்கின்றார். அன்றைய ஆரம்ப கால மெல்லிசைக்கும், இன்றைய மெல்லிசையின் வளர்ச்சிக்கும் இடையே அவர் சந்தித்துக் கொண்ட அனுபவங்களை தனது நண்பர்களோடு சுவாரசியமாக எடுத்துக் கூறி வந்திருக்கின்றார்.

பரா இல்லாத ஈழத்து மெல்லிசை! நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் விறைத்துக் கொள்கின்றது.

பரா மறைந்தாலும் அவர் பாடி வைத்திருக்கும் பாடல்கள் என்றென்றும் உலகில் உள்ள தமிழ் வானொலிகள் ஊடாக ஒலித்துக் கொண்டே இருக்கும்.

எஸ்.கே.ராஜென்

## புலம்(பல்)




**கடினமாக இருக்கிறது..**

... எனது கவிதைகள் இரண்டிலும் பெரிய அச்சுத் தவறுகள் நேர்ந்துள்ளன. முதலாவது கவிதையின் வரிகள் இரண்டாவது கவிதையில் இடம் பெற்று விட்டன. இரண்டாவது கவிதையில் 4 எழுத்துப் பிழைகள் உள்ளன. கவிதைகளின் அச்சுப்பிழைகளால் நேரும் விளைவுகள் பற்றி அறிவீர்கள் தானே. வன்னியில் பல முனைகளிலும் யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வாழ்க்கை நெருக்கடிகளுக்கு மத்தியில் படைப்புச் செயலில் ஈடுபடுவது மிகவும் கடினமாக இருக்கிறது...

**கிளிநொச்சி** **அமரதாஸ் (இளந்திரையன்)**

**உள்ளத்தை உருக்கியது**

.... மூன்று சிறுகதைகளிலும் மண்வாசனை மூக்கைத் துளைக்கிறது. சந்திரா ரவீந்திரனின் கதை உண்மைக் கதை என எண்ணிப் படிக்கையில் வேதனை பல மடங்காக உள்ளத்தை உருக்கியது. மேலும் புலம்பல் பகுதி அழகாக வெளிவரும் ஒரே அளவாக அமையப்பட்டிருக்கும். இம்முறை அதன் அழகைச் சிதைத்து விட்டீர்கள். மொழி ஆய்வு, தமிழ் இனி ஏன் மறைந்துவிட்டன....

**பிரான்ஸ்** **ஜெரோம் ரஜனி**

**கைவிட மாட்டேன்.**

... பெண்களே உங்களுக்கு பற்றிய கட்டுரை மனதிற்கு வாசிக்க உற்சாகமாக இருந்தது. மடிப்பிச்சை மன்றாட்டு மனதைத் தொட்டது. காலூன்றி எழுவோம். நிமிர்வோம் என்ற கருத்து பேனாவைத் தூக்கி எழுத வைத்தது. புலம் வாசகராகச் சேர்ந்துள்ளேன். இப்போதுதான் புலத்தின் அருமை தெரிகின்றது. இனி புலத்தைக் கைவிட மாட்டேன். புலம் என்றும் புன்னகையுடன் வாழ வாழ்த்துகின்றேன்...

**பொபிலிங்கன், ஜேர்மனி** **புளோறன்ஸ் ஜேம்ஸ்**

**தவிக்க விட்டீர்கள்.**

... பாலர்பக்கம் மிகவும் நன்றாக இருந்தது. எலியும் சேவலும் படித்த கதைதான் மறந்துவிட்டோம். மீள நினைவுக்குக் கொண்டு வருகின்றது புலம். புதியதொரு வீடு இன்னும் வரும் என்று கூறி தவிக்க விட்டு விட்டீர்கள். காட்டூன்கள் மிக நன்றாக இருந்தன. ஒரு குறை விஞ்ஞானக் கட்டுரைகள் இடம்பெறவில்லை இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் என்ற கதையை இப்போதாவது படிக்கச் சந்தர்ப்பம் தந்தீர்களே...

**பிரான்ஸ்** **உஷாதேவி நடராசா**

**ஆண்களும் வளையலாம்.**

... பெண்களே உங்களுக்கு என்று சுந்தராம்பாள் நல்ல கருத்துக்களைச் சொல்லிவிட்டு இறுதியில் பெண்கள் எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும்போது புரிந்து கொண்டு வளைந்து கொடுப்பது நல்லது என்கிறார். ஏன் பெண்கள் என்றாலே வளைந்து கொடுப்பதும் விட்டுக் கொடுப்பதும் தான் நியதியோ? குட்ட வரும்போது குனிந்தால் குட்டியே விடுவார்கள். வளைந்தால் வளைத்தே விடுவார்கள். பெண்கள் மட்டும்தான் வளைய வேண்டும் என்றில்லை ஆண்களும் வளையலாம்...

**ஜேர்மனி** **சந்திரவதனா.செ**

**மூச்சுத் திணறுகிறது.**

...புலத்திலா சொந்த நிலத்திலா நிற்கிறோம் என்ற களிப்பு வினா எழுந்தது. சோமசுந்தரப்புலவர், மஹாகவி, இலங்கையர்கோன் என்று ஈழத்தின் உன்னதங்களைக் கொணர்ந்து முன்னால் இழுத்துப் பரப்பி மூச்சுத்திணற வைத்து விட்டீர்கள். எலியும் சேவலும் என்னைப் பாடசாலையில் சிறுமிப் பருவத்துக்கு இழுத்துச் சென்றன. நாம் நடித்து மகிழ்ந்த நாடகக் காட்சிகளை எல்லாம் நினைவு கூர வைத்தது...

**இலண்டன்** **சந்திரா இரவீந்திரன்**

**நரை தெரிகிறது.**

.... அட்டைப்படம் காலத்தோடு ஒட்டிய காய்ந்த மரம் என்றுதான் சாதாரணமாக நினைத்தேன். பின்னர் புரிந்தது. பெண் என்றால் பெரு நெருப்பு. சற்று வித்தியாசமான விளைச்சல் கண்டேன். இராமலிங்கம் அவர்களின் சீவியம் ஒருமினுக்கு மினுக்கி மிளிர்ந்து நிற்கிறது. நரை தெரிகிறதே என்று நாடகப் பூச்சிட முனைய பாலர் பள்ளிக்கு இழுத்து வந்தீர்கள். காலத்தால் அழியாத தெரிவு. சிறுகதைகள் எல்லாமே சிறப்பாக, மண்வாசனை கமகமக்கிறது. பாடலாகக் கேட்டு வந்த எமக்கு புதியதொரு வீடு நாடகம் பார்த்த பெருமை ஏற்படுகின்றது....

**வட்கசன், ஜேர்மனி** **பா.சுந்தரம்பாள்**

**எறிந்துவிட முடியாது.**

.... காலத்துக்குத் தேவையான விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகள், பூமியைப் பற்றிய பிற கிரகங்களைப் பற்றிய விசயங்கள் இடம்பெறுவதில்லை. மற்றும் ஐரோப்பாவில் வாழும் எமது தலைமுறையினர் எவ்வாறு வாழ்வை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பன போன்ற விஷயங்கள் புலத்தில் இடம்பெறவேண்டும். மற்றும்படி புலம் அருமையான சஞ்சிகை. படித்து விட்டு எறிந்துவிட முடியாது. அதே போல ஒரே மூச்சில் படித்து முடித்துவிடவும் முடியாது. கருத்துக்கள் ஆழமானவை. சிந்திக்க வைப்பவை...

**டென்மார்க்** **சாந்தா செல்வம்**

**அச்சிடுதல் முறையா?**

.... முகத்தில் அறைவது குளிர் மட்டும்தானா. கௌரிமகேசனின் இவ்வாறான நோக்கிற்கு எமது பாராட்டுக்கள். எம்மைத் திருத்திக்கொள்ள எவ்வளவோ உள்ளது. சுந்தரம்பாள் பெண்களின் உண்மை நிலையை நயமாகக் கூறியுள்ளார். அவர் சிந்திய அனைத்து மையும் அனைவரையும் சிந்திக்க வைக்கும். புலத்தின் புதிய அம்சங்கள் வலு சேர்க்கின்றது. மொழியைப் பற்றிய தேடல் கிடைப்பது புலத்தில் மாத்திரம்தான். தமிழ் சினிமா காட்டும் பெண் என்ற கட்டுரையை உள்ளே பிரசுரித்த பின்பும் பெண்களை அலங்கோலமாகக் காட்டும் சினிமாப் படங்கள் விளம்பரங்களில் அச்சிடுதல் முறையா?

**பீலபெல்ட், ஜேர்மனி** **இந்து**

உங்கள் நினைவில் நிற்கும்
புதிய வியாபார ஸ்தாபனம்

# ஈழநெற்



மளிகைச் சாமான்கள்,
கடலுணவு வகைகள்,
இறைச்சி வகைகள்
பழவகைகள், மரக்கறி வகைகள்,
ஒலி ஒளி நாடாக்கள்,
சிறிய தட்டுக்கள்
பெரியோர் முதல் சிறியோர்
வரையிலான உடுப்பு வகைகள்
22 கரட் தங்க நகைகள்
மிகப் பிரதானமாக உங்களை நாடிவரும்
கடுகதி கட்டுணவு வினியோகம்
யாவற்றிற்கும் நீங்கள் எப்பொழுதும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**ELANET**
**HASELSTR - 21, 5400 BADEN, SWISS**

ஈழநெற்
☎ : 056/210 45 30, 056/210 45 31
Fax: 056/210 45 32

# EELAM TELE CARD

நற் செய்தி! நற் செய்தி! நற் செய்தி! நற்செய்தி! நற் செய்தி!
ஜேர்மன், சுவிஸ் வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்கள் தொலைபேசித் தேவையைப் பூர்த்தி செய்யும்
வகையில் ஒரு புதிய அறிமுகம்
ஈழம் தொலைபேசி அட்டைகள்.

மார்ச் முதலாம் திகதி முதல் ஜேர்மன், சுவிஸ் வாழ் தமிழ் மக்களின் பாவனைக்கு அறிமுகமாகும் ஈழம் தொலைபேசி அட்டைகள் உங்கள் தொலைபேசிப் பாவனையில் ஓர் புதிய பரிமாணம்.

குறைந்த விலையில் துல்லியமான, தெளிவான விரைவான இணைப்பைத் தரும் ஈழம் தொலைபேசி அட்டைகள்.
ஈழம் தொலைபேசி அட்டைகள் மூலமான வருமானம் எமது தேசத்தினை வளப்படுத்த உதவும் என்பதை உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்.

என்றும் உங்கள் தொலைபேசித் தேவைகளுக்கு மார்ச் முதலாம் திகதி முதல் ஈழம் தொலைபேசி அட்டைகளை கேட்டு வாங்குங்கள்.

**தொடர்புகளுக்கு:** சுவிஸ் — 079 6640014
ஜேர்மன் — 020 82053652